SWATHANTRA SANGU Regd. No. M. 2811

சுதந்திரச்சங்கு

வாரப் பதிப்பு

தொழிலாளருடன் சம்பாஷணை



மெஸ்ஸர்ஸ் ஜீவன்லால் அண்டு கம்பெனி அலுமினியத் தொழிலாளருடன், மகாத்மா காந்தி பேசிக்கொண்டிருக்கிறார்.

—போட்டோ எடுத்தவர்: உபேந்திரநாத ஜே. புரோஹித்.

புத்தகம் 4. தை 6 (19-1-34) வெள்ளி இதழ் 8.

கோடம்பாக்கம் ஆஸ்பத்திரி

ஹரிஜன வேலையை முன்னிட்டு சென்ற டிசம்பர்மீ 10ந்தேதி, கோடம்பாக்கத்தில், சர்க்கார் அட்வகேட் ஜெனரல் ஸர் அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் தலைமையின்கீழ், பிரபல டாக்டர் ஸ்ரீமான் எஸ். ரெங்காச்சாரியார் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட இலவச ஆஸ்பத்திரியைப் பற்றி, முன்னர் பிரஸ்தாபித்திருந்தோம். இந்த ஆஸ்பத்திரியின் நிர்வாகத்தை ஏற்று நடத்தி வரும் ஸ்ரீமான் டி. எ. சுந்தரம் (எல்.எம்.எஸ்., எம். பி. பி.எஸ்.) அவர்கள் பின்வரும் அறிக்கையை அனுப்பியிருக்கிறார்:—

ஆஸ்பத்திரி திறக்கப்பட்ட எட்டாவது நாளன்றே அதில் வந்து வைத்தியம் செய்து கொண்டவர் தொகை 107 ஆக ஏறிவிட்டது. இதைக் கொண்டே, ஜனங்களுக்கு இவ்வாஸ்பத்திரியிடம் எவ்வளவு பிரியம் ஏற்பட்டு வருகிறதென்பதும் அவர்களுக்கு இது எவ்வளவு அவசியமாயிருக்கிறதென்பதும் நன்றாக விளங்கும். டிசம்பர் 15உ முதல் 30உ வரையில் சராசரி தினந்தோறும் வந்து வைத்தியம் செய்து கொண்டவர் எண்ணிக்கை 80. ஜனவரி மாதத்தில் இந்தத் தொகை 100க்கு மேல் போகக்கூடுமென்றே தோன்றுகிறது.

டிசம்பர் பிற்பாதியில் வந்து வைத்தியம் செய்துகொண்டவர் எண்ணிக்கை வருமாறு:—

வயது வந்த புருஷர்	248
வயது வந்த ஸ்திரீகள்	223
ஆண் குழந்தைகள்	211
பெண் குழந்தைகள்	118

சொரிசிரங்கு, சிறங்குக் கொப்புளம், அக்கி முதலிய சர்ம வியாதிகள் சிகிச்சை செய்யப்பட்டிருக்கின்றன. இவையெல்லாம், தண்ணீரில்லாக்குறையால் அசுத்த ஜலத்தைப் புழங்குவதால் ஏற்பட்ட வியாதிகளேயாகும். மேலும், சீதபேதி, வயிற்றுக் கடுப்பு, இரத்த சோகை முதலிய வியாதிகளும் பலமாயிருக்கின்றன. அன்றியும், ஈரற்குலை சம்பந்தமான நோய்கள் இந்தக் காலத்தில் ஏழை வகுப்பு ஜனங்களிடம் ஸர்வ சாதாரணமாயிருக்கின்றன. சில மகோதர நோயாளிகள்கூட, சிகிச்சை பெற்று, சௌக்கியமடைந்திருக்கிறார்கள்.

நான்கு மைல் சுற்றளவுக்குள் உள்ள ஜனங்கள் எல்லாம் வந்து இந்த ஆஸ்பத்திரியால் அடையக்கூடிய பூரண உதவியையும் பெற்று வருகிறார்கள். 12 மைல் தூரத்திலுள்ள பல்லாவரம், தாம்பரம் முதலிய இடங்களிலிருந்துகூடச் சிலர் வந்து சிகிச்சை பெற்றிருக்கிறார்கள். ஆஸ்பத்திரி எவ்வளவு தூரம் ஜனங்களுடைய பிரியத்துக்குப் பாத்திரமாகி வருகிறது என்பதை இது ஒன்றே விளக்கிக் காட்டும். சில முகம்மதியரும் உயர்ஜாதி ஹிந்துக்களும்கூட இந்த ஆஸ்பத்திரியில் வைத்தியம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

கோடம்பாக்கம் கைத்தொழிற் கலாசாலை, கிராமாபிவிருத்தி நிதிக்காக

நந்தனார்

என்ற திவ்ய சரித்திரத்தைச் சென்னை நகரில்

காயனபடு **ஸ்ரீமதி ஸரஸ்வதி பாய்**

1934 ஹு பிப்ரவரி மீ 8 உ

மகாத்மா காந்தியின்

முன்னிலையில் கதா காலட்சேபம் செய்வார்.

நேரம், இடம், பிரவேசக் கட்டண விகிதம் முதலியன பின்னால் வெளியிடப்படும்.

சுதந்திரச்சங்கு

"சங்கு கொண்டே வெற்றி யூதுவோமே—இதைத்
தரணிக்கெல்லாமெடுத் தோதுவோமே"

போன் நே. 8088 ஆசிரியர் : சங்கு. ஸுப்ரஹ்மணியன்.

Vol. IV.] தை மீ 6வ வெள்ளிக்கிழமை (19—1—1934) [No. 8

சுண்டைக்காய்த் தானமா ?

'பசி, பசி' யென்று காதையடைத்து வந்தவனுக்கு 'இல்லை' என்று கைவிரிப்பது பாவமாம். இதற்காக, ஒரு தர்மப்பிரபு சொத்தைச் சுண்டக்காய் ஒன்றை விள்ளாதுவிரியாது முழுசாய்த் தானம் செய்துவிட்டானும். இந்த மாதிரிதான் இருக்கிறது சென்னை சர்க்கார் நிலவரி வசூல் உத்திரவும். 1918—19-ம் வருஷத்துக்குப் பின்னர் மறு பைசல் ஆன பிரதேச நிலங்களுக்கு ரூபாய்க்கு இரண்டணுவையும் மற்றவற்றுக்கு ஒரு அணு அல்லது ஒன்றரை யணுவையும் வசூலியாமல் நிறுத்தி வைக்கப் போகிறுர்களாம். ஆனல், இதை அடுத்த பசலியில் வசூலித்து விடுவதா இல்லையா என்பதை, பின்னல் விளைவைப் பார்த்துத்தான் முடிவுசெய்யப் போகிறுர்களாம். இந்தக் கஞ்சத்தனமாக உத்திரவுக்கு வெகு நீளமாக ஒரு அறிக்கையைத் தயாரித்திருக்கிறுர்கள். ஊரைவளைத்து ஏதேதோ தருக்க சாஸ்திரங்கள் படித்துவிட்டு, "இந்தா அரைக்கால் ரூபாய் ; ஆனல், அப்புறம் இதைப் பிடுங்கிக் கொண்டாலும் கொள்ளுவேன்" என்று வித்தாரமாய்ப் பேசுகிறது துரைத்தனம். வலது கையினுல் ஏராளமான சம்பளத் தொகைகளை விநியோகம் செய்து கொண்டிருக்கும் துரைத்தனம் இடது கையினுல் ஏழை விவசாயிக்கு 'சுண்டைக்காய்'த் தானம் செய்வதைக் கண்டு ஏழை விவசாயிகள் திருப்தியடையவில்லை என்றுல், அதில் ஒன்றும் அதிசயமில்லை. கொழுத்த சம்பளங்களைக் குறைத்து ஏழை விவசாயிக்கு அந்தத் தொகையை சர்க்கார் உதவலாகாதா ?



குண்டோதரப் பசி !

வந்ததெல்லாம் கொண்டதாம் குண்டோதரன் வயிறு. அந்த மாதிரிதான் இருக்கிறது இந்திய ரயில்வே நிர்வாகத்தின் வரவுசெலவு. அடுத்த 1934-35-ம் வருஷத்தில் ரயில்வே நிர்வாகம் 12 கோடி ரூபாய் செலவு செய்து சாமான்களை வாங்கப்போகின்றதாம். பொதுஜனங்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட பணத்தை இப்படிக் கோடி கோடியாக வீண் செலவு செய்வதை அறிவுடையோர் ஆக்ஷேபித்தே தீருவார்கள். தேசத்தில் தரித்திரம் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது. "சிக்கனம், செட்டு" என்ற கூக்குரல் பலமாயிருக்கிறது. இந்தச் சமயத்தில் 12 கோடி ரூபாய்க்குப் புதிய சாமான் வாங்குவதென்றால், அந்த நிர்வாகத்தைக் குறை கூறாமல் என்ன செய்வது? ஒருவேளை அந்த 12 கோடி ரூபாய்க்கும் இந்தியச் சாமான்களாகவே வாங்கினால் பரவாயில்லை என்று சொல்லலாம். ஆனால் அதுவும் செய்வதில்லை. பெரும்பாலான பணத்தை அந்நிய நாட்டுக்கு அனுப்பி அந்நியச் சாமான்களையே ரயில்வே நிர்வாகம் வாங்குகிறது. இப்படிக் காசைக் கோடிக்கணக்கில் ரயில்வேயில் முங்குவதால் அவ்வளவும் 'இந்தியக் கடன்' தொகையை அதிகரிக்கின்றது. மேலும் ரயில்வே நிர்வாகத்தில் செலவுக்கேற்ற அளவு வரவு சில வருஷங்களாகக் கிடைப்பதில்லை. எந்த விதமாகப் பார்த்தாலும் ரயில்வே நிர்வாகம் இந்த 12 கோடியைச் செலவு செய்யக் கூடாதென்றே ஏற்படுகின்றது. பொதுஜன அபிப்பிராயத்தை மீறிச் செலவு செய்வதே நோக்கமாக மேற்படி நிர்வாகம் இருக்குமானால், அது பொதுஜன அபிப்பிராயத்தைக் கீழே போட்டு மிதிப்பதாகத்தான் அர்த்தம்.

'மோட்டார்' வைஸ்ராய்

வில்லிங்டன் பிரபுவுக்குப் பிறகு இந்தியாவில் யார் வைஸ்ராய்? இந்த விஷயம் சீமைப் பத்திராதிபர்களின் மண்டைகளைக் குடைந்து கொண்டிருக்கிறது. கூட்டுப் பார்லிமெண்டுக் கமிட்டியிலும், விவசாயக் கமிஷனிலும் தலைமை வகித்த லார்ட் லின்லித்கோ என்பவரை ஓர் கோஷ்டி சிபார்சு செய்கின்றதாம். இன்னொரு கோஷ்டி லார்டு லண்டனேரி என்பவரை வைஸ்ராயாக்க முயன்று கொண்டிருக்கிறதாம். லார்ட் லண்டனேரி ஏகாதிபத்திய ஆகாயவிமானப் படையின் பேரதிகாரியா யிருக்கிறார். சமீபத்தில் அவர் இந்தியாவுக்குப் பறந்து வந்து, ஊரைச் சுற்றிப் பார்த்துவிட்டுப் போயிருக்கிறார். அவர் இங்கிலாந்துக்குப் போனதும் பின்வருமாறு ஓர் நண்பரிடம் சொன்னாராம்.

"30 வருஷங்களுக்கு முன்னே இந்தியாவைக் கர்ஸான் பிரபு ஆண்ட காலத்தில் இந்தியாவில் மோட்டார்க் கார்கள் ஓடியதைவிட அதிகமாக இப்போது ஓடுவதைக் கண்டேன்" என்று கூறினாராம். என்ன ராஜீய ஆராய்ச்சி! என்ன அழகான படிப்பினை! இவர் வைஸ்ராயாக வந்தால் இன்னும் ஒரு லட்சம் மோட்டார்களும், பத்தாயிரம் ஆகாய விமானங்களும் இந்தியாவில் இறக்குமதியாவதற்கு ஏற்பாடு செய்வார் போலிருக்கிறது. கர்ஸான் காலத்திலிருந்த மோட்டார் தொகை மட்டும் இவர் கருத்துக்கு ஏறுவானேன்? கர்ஸான் காலத்தில் இந்தியாவில் இராப்பட்டினி கிடந்த ஒரு ஏழையின் வம்சம் இன்றைக்குப் பகல் பட்டினியும் கிடக்குமாறு அவ்வளவு வறுமை அதிகமாயிருக்கிறதே, அந்தப் பரிதாபக் காட்சி லார்ட் லண்டனேரி கண்களில் ஏன் படவில்லை?

மலையாள மாகாணமா?

யார் இதை ஆதரிப்பார்கள்? ஸ்ரீ C. S. ரங்கய்யர் டெல்லிச் சட்டசபையில் ஓர் தீர்மானம் கொண்டுவரப் போகிறாராம். "தமிழ், தெலுங்கு முதலிய பாஷைகளுக்கு வேறுபட்டது மலையாள பாஷை. ஆகவே அந்தப் பாஷை வழங்கும் பிரதேசத்தைத் தனி மாகாணமாக ஆக்கிவிட வேண்டும்" என்பது அவரது தீர்மானம். இப்படி மேலும் மேலும் மாகாணங்களின் தொகைகளை அதிகப்படுத்துவதை நாம் ஆதரிக்கவே மாட்டோம்.

இன்னொரு மாகாணம் அதிகமானால், அதற்கென்று ஒரு கவர்னர், ஒரு பட்டாளம், ஒரு குதிரைப்பந்தய மைதானம் முதலிய அங்கங்கள் தோன்றுமேயன்றித் தேசத்திற்கு யாதொரு நல்லதும் விளையப்போவதில்லை. வீண் செலவுதான் அதிகமாகும். இந்தமாதிரி பிரித்துப் பிரித்து நம்மை நாமே கெடுத்துக்கொள்கின்றோம். மலையாளம் தனி மாகாணமாவதற்கு வேறு ஒரு காரணத்தையும் ஸ்ரீயுத ரங்கய்யர் காட்டவில்லை. "ஒருவேளை ரங்கய்யருக்கு மலையாளத்தின் முதல் கவர்னராக வந்துவிடலாமென ஆசையோ?" என்று பம்பாய் ஸென்டினல் பத்திரிகை கேட்பதுபோல, நாம் அவரைக் கேட்க விரும்பவில்லை. தயவு செய்து இந்தத் தீர்மானத்தை ஸ்ரீயுத ரங்கய்யர் வாபீஸ் பெற்றுக் கொள்வாராக.

ஷூஸ்டருக்குப் பின் கிரிக்

இந்தியாவின் பொக்கிஷ மந்திரியாக இருக்கும் ஸர் ஜார்ஜ் ஷூஸ்டரைப் பத்திரிகை படிப்போர் அனைவருக்கும் பரிச்சயமுண்டு. 'வரி' என்ற வாளை இடமும் வலமும் வீசி வீசி அவர் வரவு செலவைச் சமாளித்த கதையை யாரால் மறக்கமுடியும்? நாலைந்து மாதத்துக்கொரு முறை 'குடு குடு'வென்று சீமைக்கு ஓடி ஓடித் திரும்பிக்கொண்டிருந்ததோடு, லண்டன் பூசாரிகள்சொன்னபடி இந்தியச் சட்டசபை என்ற குரங்கை ஆட்டிவைத்த பெருமையும் ஷூஸ்டரைச் சேர்ந்ததே. அவரது பிரசாதமாகத்தான் 'ரிஸர்வ் பாங்க்' திட்டமும் இந்தியாவில் நுழையப் போகின்றது. பொதுஜன அபிப்பிராயத்தைப்பற்றித் துளியும் கவனிக்காமல் தான் நினைத்த வழியே காரியத்தை நடத்திக்கொள்ளும் யதேச்சாதிகாரத்தில் ஷூஸ்டருக்குக் குத்தகை. இப்பேர்ப்பட்ட ஷூஸ்டர் இந்த உத்தி யோகத்தினின்று போனபின்பு மிஸ்ட கிரிக் என்ற துரையைச் சீமையினி இறக்குமதி செய்யப்போகிறார்கள இந்தியாவில் இந்த உத்தியோகத் திறமையுடன் வகிக்க இந்தியர் கிடைக்கமாட்டார்களா?

தமிழ் மாணவர்களே!

ஜாதிப் பித்தத்தை இந்த நாட்டினின்று ஒழிப்பதற்குக் கடும்போர் புரிவதென்று பம்பாய் மாணவர்கள் தீர்மானித்து விட்டனர். அன்று பம்பாய்க் கூட்டத்தில் தலைமை வகித்த தேசபக்தர் ஸ்ரீயுத நரிமன் ஆவேசம் மிகுந்த பிரசங்க மொன்று செய்திருக்கிறார். நாட்டின் முன்னேற்றத்துக்கும், தேசியக் கோரிக்கைகளுக்கும் இடையூறாக இந்த ஜாதிச் சண்டைகள் இருப்பதை அவர் எடுத்துக் காட்டினார். குரங்கினிடம் அப்பத்தைப் பங்கிடப்போன பூனைகள் போல சில ஜாதித் தலைவர்கள் நடந்து கொள்ளும் பான்மையைக் கண்டித்தார். ஹிந்து மகா சபையாம்! முஸ்லீம் லீகாம்! பிராம்மணர் சங்கமாம்! அல்லாதார் கூட்டமாம்! இப்படியாகப் பிரித்துப் பிரித்து ஒருவரோடொருவர் சண்டை மூட்டுவதையே தொழிலாகக் கொண்டுள்ள சில தலைவர்கள் இந்த நாட்டில் இன்னுமிருந்து வருகின்றனர். அந்நிய நாட்டினர் நமது அலங்கோல வாழ்வைக்கண்டு எள்ளி நகையாடுகின்றனர். இத்தகைய ஜாதிப் பூசல்களை இன்னமும் வளர்க்கவேண்டுமோ? சென்றன செல்க. இனிமேல் தேசத்தின் பாரத்தை இளைஞர் வகித்தாகவேண்டும். "ஜாதிச் சண்டைக்கு அடிகோலும் சங்கங்களும், கட்சிகளும் இளைஞரை மயக்கி இழுக்க முற்பட்டால் அவைகளை விட்டு ஒதுங்கி விடவேண்டும்" என்பது பம்பாய் மாணவர்களின் யோசனை. மேற்படி ஜாதிப் பித்தச் சங்கங்களை அனாதரவாக விட்டுவிட்டால் அவை தாமே தம் குழிகளைத் தோண்டிக்கொண்டுபுகுந்துகொள்ளும். தமிழ் நாட்டு மாணவர்கள் இப்போது என்ன செய்யப்போகின்றனர்? அழகாக உடையுடுத்து பள்ளிக்கூடத்திற்குப் போய்வருவதுமட்டும் மாணவர் தொழிலன்று. தேசத்திற்கு நெருக்கடி நேர்ந்த காலத்தில் பிறந்த பொன்னாட்டின் சேவையி லிறங்குவதும் மாணவர் கடமையாகும். கல்வியின் பயன் தேசபக்திதான். ஜாதிப் பித்தத்தை ஒழிக்க ஆங்காங்கு தமிழ் மாணவர்கள் கூட்டம் போட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றுவார்களா? அல்லது வழக்கம் போல இரும்புத் தலையணைமீது தலை வைத்து உறங்கிக்கொண்டேயிருப்பார்களா?

சோத்தைப் பூசனிக்காய்

பூஷணிக்காயோ சொத்தை. கறிக்கும் ஆகாது; குழம்புக்கும் ஆகாது. ஆனால் அதை எதற்கு உபயோகிக்கலாமென்பதை ஆராய்ச்சி செய்வதற்காக ஓர் கூட்டம் போட்டுப் பலநாள் வாக்குவாதம் நடத்திப் பார்த்து முடிவுக்கு வரவேண்டுமாம். அதற்குள் என்னவாகும்? பூஷணிக்காய் இன்னும் அதிகமாக அழுகும். அந்த அழுகல் பூசணிக்காய்க்குச் சமானம் பிரிட்டிஷ் சர்க்கார் அளித்துள்ள வெள்ளைக் கடுதாசித் திட்டம். அதை அப்படியே தூக்கித் தொட்டியில் எறிந்துவிட்டு அதைப் பற்றி மறக்கவேண்டியதுதான் முதல் வேலை. ஆனால் இங்கிலாந்துக்குச் சென்று திரும்பிவந்த ஜயகர், ஆகாகான் முதலியவர்கள் எத்தனை நாளைக்கு வேலையில்லாமல் இருப்பார்கள்? ஆகவே ஓர் ஸர்வகட்சி மகாநாட்டைக்கூட்டி வெள்ளைக் கடுதாசித் திட்டத்தைத் திருத்தியமைக்க எல்லோரும் பாடுபடவேண்டுமெனச் சொல்லி வருகிறார்கள். இந்தப் பர்தா மகாநாட்டு எண்ணத்தைச் சுக்குத் தூளாய் நொறுக்கி விட்டார் பண்டித ஜவஹர்லால்! வெள்ளைக் கடுதாசித் திட்டமே வேண்டாமென்று தேசம் சொல்லிக் கொண்டிருக்கும்போது அதைச் சீர்திருத்தி அமைக்கவாவது? வேணுமானால் ஜயகரும் ஆகாகானும் சீமைக்கே குடிபோய் விடட்டுமே. இந்தியாவிலிருந்து கொண்டு ஏதாவது கரடி விட்டுக்கொண் டிருப்பானேன்?

விதேசி உப்பு விசேஷமா?

மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்ட இந்தியாவில் உப்புத் தயாரிப்பது கஷ்டமா? ஆனால் லட்சக்கணக்கான டன் எடையுள்ள உப்பு அந்நிய நாட்டினின்று இங்கு வந்து இறங்கிக் கொண் டிருக்கிறதென்றால், அது இந்த நாட்டிலுள்ளவர்க்கு அவமானம்தான். உப்பு இலாகா என்று தனியாய் ஒரு இலாகா இருக்கிறதே, அது ஏன் முயற்சி எடுத்துக்கொள்ளக் கூடாது? அதிக உப்பளங்களை உண்டாக்கி அதிகமாக உப்பு உற்பத்தியாக ஏற்பாடு செய்வது சுலபமான வழிதானே. கராச்சி உப்பு வர்த்தகர்கள் சமீபத்தில் செய்துள்ள கோரிக்கையின்படி உப்பு உற்பத்தியை அதிகரிக்க, இந்தியத் துரைத்தனம் உதவி செய்யுமா?

சர்வதேசச் சங்கம்!

ஜினிவாவிலுள்ள சர்வதேசச் சங்கம் உலகத்திற்கு மிக்க உபயோககரமானதாக இருக்கலாம். ஆனால் அதற்குப் பிரதிநிதிகளை இந்தியத் துரைத்தனம் அனுப்புவதை மட்டும் நம்மால் ஒப்புக்கொள்ள முடியாது. குடிகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் சென்றால் ஏதாவது தாய் நாட்டின் கட்சி அங்கு எடுபடுவதற்கு இடமுண்டேயன்றி, சர்க்கார் தமக்கிஷ்டப்பட்ட சிலருக்கு 'ஜீவனாம்சம்' கொடுக்கும் நோக்கத்தோடு அனுப்பும் வழக்கத்தினால் வீண் செலவுதான் கண்டபயன். ஆகவே 'இனிச் சர்வதேச சங்கத்துக்கு இந்தியா பண உதவி செய்யலாகாது; பிரதிநிதியும் அனுப்பத் தேவையில்லை" என்ற ஓர் தீர்மானத்தை டெல்லிச் சட்டசபையில் ஒருவர் கொண்டுவரப் போகிறாராம். இப்போதுள்ள ஊழல் சட்டசபையில் மேற்படி தீர்மானம் குப்பைத் தொட்டியில் எறியப்பட்டு விடலாம். ஆனால் உண்மையென்னவோ உண்மைதான். இந்தியா தனது பிரதிநிதிகளை மேற்படி சங்கத்திற்கு அனுப்புவதால் கடுகத்தனை பயனும் இதுவரை கண்டதில்லை. ஆனால் இரகஸ்யமோ வேறு; சர்வதேச சங்கத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆட்கள் அதிகத் தொகையில் இருக்க வேண்டுமென்பது பிரிட்டிஷாரின் சூழ்ச்சி. அதற்குக் கூட்டம் சேர்ப்பதற்கு உதவியாகவே இந்தியாவினின்று பிரதிநிதிகள் கொண்டுபோகப் படுகின்றனர். ஆகவே அந்தச் செலவுகளைப் பிரிட்டன் கொடுத்துக்கொள்ளட்டும்; இந்தியப் பணத்தில் ஏன் கை வைக்கவேண்டும்?

'ராஜா'த்தனம்

லண்டன் நகருக்குச் சென்றுள்ள பாவல்பூர் நவாப்பின் 'ராஜாத்தனத்'தைப்பற்றிப் பம்பாய்க் கிராணிகளுக்கு ஓர் செய்தி கிடைத்துளது. ஒரே ஒரு மாலையில் அவர் 750 பவுன்களுக்கு விளையாட்டுப் பொம்மைகள் வாங்கினாராம். 15 அடி உயரத்தில் 6 அறைகளுடைய மரப்பாச்சி வீடு ஒன்று வாங்கினாராம். அதன் விலை 650 பவுன்களாம். இரண்டு விளையாட்டு மோட்டார்கள் நூறு பவுனுக்கு வாங்கினாராம். 'பணம்' கொழுத்த கை அரிப்பெடுக்குமென்பதற்கு இதைவிட உதாரணம் வேறுண்டோ?

குறிப்பும் செய்தியும்

ஏகபத்தினி விரதத்தாருக்கே !

கிறிஸ்தவன் ஒரு மனைவியைத்தான் கல்யாணம் செய்துகொண்டிருக்கச் சட்டம் அநுமதிக்கிறது. 'லார்ட்' என்று ஒரு பட்டம் வழங்குகிறார்களே, அது கிறிஸ்துவ மதச் சட்டத்தைப் பின்பற்றியதாம். ஆகவே இரண்டு மனைவிகளைக் கட்டிக்கொள்ளும் எந்த மதத்தானுக்கும் அந்த அருமையான பட்டத்தைத் தரலாகாதாம். முன்னொருக்கால் பிரம்ம சமாஜியாகிய 'ஸின்ஹா'வுக்கு 'லார்ட்' பட்டம் கொடுக்கப்பட்டதற்குக் காரணம் பிரம்மஸமாஜச் சட்டத்தின்படி இரண்டு மனைவியரைக் கட்டிக்கொள்பவனைத் தண்டிக்கலாமென்றிருக்கிறதாம். ஆனால் அந்த நியதியிலும் ஏதோ தவறிருப்பதால் இனி இந்த லார்ட் பட்டத்தை பிரம்ம சமாஜத்தைச் சேர்ந்தவர்களுக்குக்கூடத் தரமாட்டார்களாம். கனம் அகாகானுக்கும், ஸர் தேஜ்பகதூர் ஸப்ரூவுக்கும் 'லார்ட்' பட்டங்கள் தருவதென பிரிட்டிஷார் யோசித்திருந்ததாகவும், பிறகு அவ்வாறு கொடுக்கப்படாமற் போனதற்கு இந்த ஒற்றைப் பெண்டாட்டிச் சட்டம் குறுக்கிட்டதாகவும் கூறப்படுகின்றது. இந்தத் தள்ளாத வயதில் ஸாப்ரூ இன்னொரு கல்யாணம் செய்து கொள்வாரா மாட்டாரா என்பது வேறு விஷயம். நிற்க, இந்தப் பட்டம் கிடைக்கவில்லையே என்று எந்த இந்தியனும் வருந்தவில்லையென்று தாழ்மையாகப் பிரிட்டிஷாரிடம் தெரியப்படுத்திக் கொள்கின்றோம்.

புடவைக்குப் புகழ்மொழி

"உலகத்தில் பெண்களணியும் ஆடைகளனைவற்றிலும் உயர்ந்தது இந்திய ஸ்திரீகள் அணியும் புடவைதான்" என்று மிஸ் ரேணி பிளோரிணி என்ற ஐரோப்பியப் பாடகி கல்கத்தாவில் கூறியிருக்கிறாள். அது அவளுடைய அபிப்பிராயம். ஆனால் இந்தியாவில் பிறந்து வளர்ந்த சில படித்த பெண்கள் ஐரோப்பிய மாதுகளைப்போலக் கவுன் அணிந்து கொள்வதும், தலை மயிரை வெட்டிக் கொள்வதும், குதிகால்கொப்புள பூட்ஸை அணிந்து கொள்வதும் தான் அழகு என்று நினைக்கின்றார்களே, அதற்குக் காரணமென்ன? இக்கரைக்கு அக்கரை பச்சையா?

கரும்புக்குப் 'பிரைஸ்'

பம்பாய் மகாராஷ்டிர வியாபாரச் சங்கம் இரண்டு பரிசுகளை ஏற்படுத்தியிருக்கிறது. முதற் பரிசு 1000 ரூ. இரண்டாவது பரிசு 500 ரூ. எந்தக் குடியானவர்கள் சிறந்த கரும்புத் தோட்டங்களை வைத்திருக்கிறார்களோ, அவர்களுக்கு அந்தப் பரிசுகள் கொடுக்கப்படுமாம். கரும்புப் பயிர் செய்பவர்களுக்கு மட்டும் பரிசா? கரும்பு தின்பவர்களுக்குக் கொடுக்கக் கூடாதா என்று சென்னை மாகாண வாசி கேட்கின்றான். ஏனெனில், அதிகச் சிரமமின்றி ஏதாவது பரிசுத் தொகையைத் தட்ட வேண்டுமென்பது சென்னை மாகாணத்தில் தோன்றியுள்ள ஓர் புத்தியாகும்.

கிழ மாப்பிள்ளைகள்

"பிரிட்டிஷ் இந்தியாவில் இந்த வயதுக்குக் குறைந்த எந்தப் பெண்ணுக்கும் கல்யாணம் செய்யக் கூடாதென்று சாரதாச் சட்டம் கட்டுப்படுத்துகின்றது. ஆனால் இந்த வயதுக்கு அதிகப்பட்ட கிழவர்கள் கலியாணம் செய்து கொள்ளக் கூடாதென்று எந்தச் சட்டமும் தடைசெய்யவில்லை. எந்த நாகரிக தேசத்திலும் இதற்காக ஓர் சட்டம் நிறைவேற்றப்படவில்லை. சட்டம் செய்பவர்கள் எந்த நாட்டிலும் ஆண்பிள்ளைகளே யல்லவா? அதுதான் இதற்குக் காரணமோ என்னவோ? இந்த தேசத்தில் 60 வயதுக்கு மேற்பட்ட பழுத்த பேர்வழிகள் சிலர் பச்சிளம் பெண்களுக்குத் தாலி கட்டுவதற்குத் துணியும் அநியாயக் காட்சிகளைக் காண்கின்றோம். இத்தகைய அநியாய விவாகங்களைப் பொதுஜன அபிப்பிராயம் பலமாகக் கண்டிக்க முற்படவில்லை. ஆனால் சுதேச சமஸ்தானமொன்றில் '45 வயதுக்கு மேற்பட்ட கிழவர் சிறிய பெண்களை கலியாணம் செய்துகொள்ளக் கூடாது' என்று சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. அப்படி நடந்தால் 1,000 ரூபா அபராதம் என்றும் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தில் காமப் பித்தம் கொண்டலையும் பணக்காரக் கிழவர்களைக் கட்டுப்படுத்த முடியாதே! ஆயிரம் ரூபாயை எடுத்து வைத்துவிட்டு மேளம் தட்டினார்களானால் என்ன செய்வது?"

—அட்வான்ஸ்.

'டாலர்' உழுவதுண்டோ?

பொருளாதார சாஸ்திரம் ஓர் மஹேந்திர ஜாலமாயிருக்கிறது. இந்தக் கால உலகத்தை அலங்கோலப் படுத்தியிருப்பது காசுக்காரரின் செப்படு வித்தைதான். "வை, ராஜா, வை" என்று சொல்லி, சக்கரத்தைச் சுற்றுகிறார்கள்; பொம்மைக் குதிரைப் பந்தயம் விடுகிறார்கள்; வார்த்தைப் போட்டி போடுகிறார்கள். "ஹா!" என்று மூக்கில் விரலை வைத்துக் கொண்டு நாம் நிற்கிறோம். நமது ஜேபியிலிருக்கும் பணம் துள்ளிக் குதித்து ஓடிப் போகிறது. "என்ன ஏமாற்று!" என்று பின்னால் பெரு மூச்சு விடுகிறோம். பெரிய பெரிய பொருளாதார நடவடிக்கைகளும் இதே செப்படு வித்தையாகத்தானிருக்கின்றன; ஆனால், பெரிய ஸ்கேலில்—அளவில்—நடக்கின்றன. பணத்தின் உண்மையான மதிப்பையும் அலுவலையும் நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஸர் டானியேல் ஹாமில்டன் கூறுகிறார்:—"அரிசியை விளைப்பவன் மனிதன்; துணியை நெய்பவன் மனிதன்; வீடு, மரக்கலங்களைக் கட்டுபவன் மனிதன். பணம் இவற்றில் எந்தக் காரியத்தையும் செய்வதில்லை. நீங்கள் எங்காவது தங்க மோகரா உழுவதைப் பார்த்திருக்கிறீர்களோ? பத்து ரூபாய் நோட்டு, துணி நெய்வதைக் கண்டிருக்கிறீர்களோ? வெள்ளி ரூபாய் முட்டையிடுவதைத்தான் தரிசித்ததுண்டோ? இல்லை, இல்லை. அர்ச்சுனன் உழுகிறான்; பீரு நெய்கிறான்; கோழிதான் முட்டைகள் இடுகிறது. உயிருள்ள மனிதனே உண்மை மூலதனம்; பணம் உயிரற்ற சடம். எனினும், உயிருள்ள மனிதனை உயிரற்ற சடம் ஆட்டிவைக்கிறதே, என்ன விந்தை!"

இந்த அர்த்த புஷ்டியுள்ள சொற்களை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பார்க்கவேண்டியது அவசியம்.

Chats Behind Bars
BY
C. RAJAGOPALACHARI
Price As. 6 *Postage extra.*
Swathanthra Sangu Book Depot
8-c, Pycrofts Road,
Triplicane, Madras.

அன்னையின் ஆறுதல்

("திரியம்பகன்" எழுதியது)

லட்சுமிக்கு அப்பொழுது வயது ஐந்துதான். அன்றைக்கு ஞாயிற்றுக் கிழமை. அடுத்த வீட்டுச் சீனு பள்ளிக் கூடத்தை மறந்தவனாய் லட்சுமியை விளையாட அழைத்தான்.

லட்சுமி உள்ளே ஓடிவந்து அன்னையின் கால்களைக் கட்டிக்கொண்டாள். "அம்மா! சீனுவோடு வாசல்லே போயி விளையாடட்டுமா?" என்று கேட்டாள்

"என் கண்ணே! இன்றைக்கு வாசலில் மோட்டாரும் வண்டியுமாயிருக்கு. சீனுவை அழைத்துக்கொண்டு உள்ளேயே விளையாடு" என்றாள் தாய் ஜானகி.

லட்சுமிக்கு அதில் திருப்தியில்லை. சமையலறைக்குச் சென்று கொண்டிருந்த அன்னையைக் கடைக்கண்ணால் பார்த்தாள். அவள் தலை மறைந்ததும் புன்சிரிப்புச் சிரித்தாள். குதித்தோடிக் கொண்டு வாசலில் வந்து சீனுவுடன் தெருப் புழுதியிலே விளையாட ஆரம்பித்தாள்.

அன்றைக்குத்தான் ஜில்லா போர்டுத் தேர்தல் திருவிழா. 'பரோபகார' சிந்தனையுள்ள இருவர் அந்த ஜில்லாவின் 'முன்னேற்ற'த்திற்கு உழைப்பதில் 'நான், நீ' என்று கடுமையாகப் போட்டியிட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்களது மோட்டார்களும் வண்டிகளும் ஓய்வின்றி ஊரெல்லாம் பறந்துகொண்டிருந்தன. 'பூம் பூம்' 'ஹாய் ஹாய்' என்ற சப்தங்கள் காதைத் துளைக்கின்றன. ஆனால் சீனுவும் லட்சுமியும் இந்தத் தடபுடலைக் கவனிக்கவேயில்லை. அவர்கள் அத்தேர்தலை முழுதும் பகிஷ்கரித்துவிட்டார்கள்; யாருக்கு வோட் செய்வதென்ற கவலை அவாகளுக்கில்லை.

'எந்த விளையாட்டுத் தேவலை?' என்று யோசித்தார்கள். பாண்டிக் கோடு கிழித்து விளையாடுவதென்று முடிவாயிற்று. ஆனால் விளையாட்டின் நடுவே இருவருக்குள்ளும் அபிப்பிராய பேதமேற்படவே, கோடு அழிக்கப்பட்டது.

அடுத்த நிமிடம் கீழே கிடந்த ஓட்டுத் துண்டைச் சீனு 'சாமி'யாகப் பிரதிஷ்டை செய்தான். லட்சுமி 'ஆடாதொடை' இலையொன்றைப் பரப்பி, அதில் பன்னீர்த் தண்டுகளை நிவேதனமாகப் படைத்தாள்.

திடீரெனச் சீனு 'சாமி'யைத் தூக்கிக் கையில் வைத்துக்கொண்டு, "லட்சுமி! சாமிக்குக் கீழே மணல் போட வேண்டாமா?" என்றான். லட்சுமி சிரித்துக்கொண்டே குதித்துக்குதித்து ஓடினாள். தெருவின் மறுபக்கத்திற்குப் போய் இரண்டு கைகளாலும் புழுதியை அள்ளிக்கொண்டு மெல்ல நடந்து வருகிறாள்.

மகா வேகமாக வந்துகொண்டிருந்தவோர் மோட்டார் 'பூம் பூம் பூம்' என்று அலறிற்று. ஆனால் லட்சுமியின் காதில் அது விழவேயில்லை. அவள் மனம் 'ஓட்டுச் சாமி'யிடம் லயித்திருந்தது. மோட்டாரையே கவனிக்காமல் அவள் வந்து கொண்டிருந்தாள். அவளைக் கவனிக்காமல் மோட்டார் வந்துகொண்டிருந்தது. அவளுக்கு ஓட்டில் கருத்து; அதற்கு வோட்டில் கருத்து.

மோட்டார் அவளை நெருங்கிவிட்டது. ஆ! அதோ டிரைவர் திடீரெனப் 'பிரேக்' போட்டு நிறுத்துகிறான். அந்தச் சமயம் 'ஐயோ! அம்மா!' என்று கிளம்பிய அக்குரல் யாரைத்தான் கலக்கியிராது?

அந்தக் குரல் சமயலறையிலிருந்த ஜானகியம்மாளின் இருதயத்தைச் சுருக்கெனத் தைத்தது. "என்னடி! என் தங்கமே!" என்று அலறிக்கொண்டே தாயார் ஓடிவந்து வாசலில் பார்த்தாள்.

லட்சுமி நடுத்தெருவில் கிடந்தாள். அருகே யார் யார் நின்றார்களென்பதைக் கவனிக்க, பெற்ற தாயின் கண்களுக்கு நேரமில்லை. ஒரே ஓட்டமாகக் குழந்தை கிடந்த இடத்துக்கு ஓடி வந்தாள். முகத்தில் இன்னும் புன்சிரிப்பு மாறவில்லை. கைகளில் புழுதிமண் அப்படியேயிருந்தது. விலாவிலிருந்து பெருகியிருந்தது இரத்தம். குழந்தையை வாரியெடுத்துப் பத்து மாதம் சுமந்த வயிற்றோடு அணைத்தாள் பெற்றெடுத்தவள். உடம்பு ஜில்லிட்டிருந்தது. "ஐயையோ! என் தங்கமே. இப்படி யாச்சா?" என்று அலறினாள். அழுதாற் பயனென்ன? லட்சுமி போனவள் வருவாளா?

* * *

'ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணு'யிருந்த செல்வத்தைப் பறிகொடுத்துவிட்ட ஜானகியம்மாளைத் தேற்றுவதற்கு யாரால் முடியும்?

சீதாராமய்யர் மிகவும் சாந்த சுபாவமுள்ளவர். எந்த வம்புக்கும் போக மாட்டார். எல்லாரோடும் சமரசமாகப் போவதையே கொள்கையாகவுடையவர். ஆனால் லட்சுமியின் மரணத்திற்குக் காரணமாயிருந்த மோட்டார் ஓட்டியை மட்டும் லகுவில் விடுவதாக அவருக்கு உத்தேசமில்லை. "விட்டேனா அந்தப் பயலை! பழிக்குப் பழி வாங்கி, கோர்ட்டு மூலமாக அவனை ஒழித்து விட்டுத்தான் மறுகாரியம்" என்று அய்யர் ஆத்திரத்துடன் இரைந்தார்.

மறுநாள் டிரைவர்மீது கோர்ட்டு மூலமாக வழக்கும் தொடரப்பட்டது. மோட்டார் ஓட்டி ஆயிரம் ரூபாய் 'டாமேஜா'க் கொடுக்கவேண்டுமெனக் கோர்ட்டார் தீர்ப்பளித்துவிட்டார்கள்.

சீதாராமய்யர் கையில் ஆயிர ரூபாய் கரென்ஸி நோட்டுகளாக வைக்கப்பட்டது. பழிவாங்கி விட்டதாக அவர் திருப்தியடைந்தார். அந்த ரூபாயினால், இழந்த லட்சுமியை மீண்டும் பெற்றதுபோல் ஆனந்தமடைந்துவிட்டார்.

"அடி! அவனைப் பழி வாங்கி விட்டேன். இதோ பார்! ரூபாய் ஆயிரம் கழற்றிவிட்டேன்" என்று கூறி, நோட்டுக்களை மனைவியிடம் கொடுத்துவிட்டு, அவள் முகத்தை நோக்கினார்.

அவர் எதிர்பார்த்ததற்கு நேர் மாறாக, அவள் முகத்தில் கோபமும் வெறுப்பும் ஜ்வலித்தன. தன் கணவனைக் கொடூரமாக நோக்கினாள்.

லட்சுமி அவள் தாய்க்கு ஓர் விலையற்ற மாணிக்கம். அந்த மாணிக்கத்தை யிழந்து பெற்ற விலையோ இந்த ஆயிர ரூபாய்? அப்படியும் ஒரு விலை இருக்கமுடியுமோ? இந்த ஆயிர ரூபாய்

ஒரு லட்சுமியைக் கொண்டு வந்து தருமோ?

ஜானகியின் மனது பொங்கிக் குமுறியது. கணவனை உறுத்து நோக்கினாள். கையிலிருந்த நோட்டை இரண்டு மூன்று துண்டுகளாகக் கிழித்து, கணவன் முகத்தில் விட்டெறிந்தாள். 'கோ!' என்றலறிக்கொண்டு, சமையலறைக்குள் ஓடிவிட்டாள்.

ஜானகியின் சாந்த சொரூபத்தையே என்றும் கண்டிருந்தவரான சீதாராமய்யர் ஒன்றும் புரியாதவராய் நடுநடுங்கிக் கொண்டு நின்றார்.

* * *

இந்த சம்பவங்கள் நடந்து இரண்டு வருஷங்களாகி விட்டன. அந்தத் தாயின் துக்கத்தைச் சிறிது சிறிதாய் மாற்ற ஈசனே திருவுளங் கொண்டான் போலும்! கொஞ்சும் குதலைமொழிச் சிறுவனொருவனுக்கு அவள் தாயானாள்.

சீதாராமய்யர் நாற்காலியில் சாய்ந்து கொண்டு, தினசரியைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். அவரது இடது கால் அவரை யறியாமலே அருகிருந்த தொட்டிலை ஆட்டிக்கொண்டிருக்கிறது. ஜானகி சமயலறையில் பால் காய்ச்சிக் கொண்டிருந்தாள்.

திடீரெனத் தொட்டிலி லிருந்த குழந்தை கத்தியது. ஜானகி ஓடிவந்து அதை எடுத்தாள். இரண்டு கன்னங்களிலும் மாற்றி மாற்றிப் பல தடவை முத்தங்கொடுத்தாள்.

"இதைப் பார்த்தீர்களா? நம் குழந்தை லட்சுமியையே உரித்துவைத்தது போ லிருக்கிறது! அதே அச்சு! சிரிக்கும்போதுதான் நன்றாகத் தெரிகிறது" என்றாள் ஜானகி. அப்பொழுதும் அவள் கண்களில் ஒன்றிரு நீர்த்துளி ஜொலிக்காமலில்லை. அதே மூச்சில் அவள் சிறிது தழதழத்த குரலில் கணவனை நோக்கிச் சொல்லுகிறாள்:—

"அந்த நோட்டைக் கிழித்ததுகூட உங்களுக்குக் கோபமா யிருந்திருக்கும். நான் என்ன செய்வேன்? எனக்கென்னவோ ஆவேசமா யிருந்தது; ஒன்றும் தெரியவில்லை" என்று சொல்லி, கணவன் வதனத்தை உற்று நோக்கினாள்.

"என்னம்மா, நீ! எனது முட்டாள் தனத்தைப் பற்றித் திருப்பித் திருப்பி நினைப் பூட்டிக்கொண் டிருக்கிறாயே" என்று ஈன சுரத்தில் கூறிய சீதாராமய்யர், குழந்தை சீனுவை வாங்கி ஒரு முத்தமிட்டுக் கொண்டார்.

எதிர்கால ஜோதிடம்

நீங்கள் பிறந்த நாழிகை அல்லது கடிதம் எழுதும் நேரத்தையாவது குறித்தனுப்பினால், உங்கள் எதிர்கால ஆயுள், தனம், சகோதரம், மாதுர், பிதுர், ஸந்தானம், சத்ரு, ருணம், களத்திரம், களத்திர ரூபம், பாக்கியம், ஜீவனம், தொழில் லாபம், விரையம் ஆக இத்யாதி விஷயங்கள் பூராவும் தெரிவிக்க ரூ. 2. ஒரு வருஷத்திற்கு மாதவாரி நடக்கும் பலன் எழுத ரூ. 2. பலன் சரியாயில்லாவிடில் பணம் வாபீஸ் செய்யப்படும்.

அருட்பிரகாசர் ஜோதிடாலயம்,

வைத்திக் குப்பம், புதுவை. (பிரஞ்சிந்தியா.)

விவாஹத்திற்கு

ரூ. 1000

உங்களுக்கு வேண்டுமா?

விவரங்களுக்கு எமக்கெழுதவும்:—

கலியாண உதவி நிதி,

589, பைகிராப்ட்ஸ் ரோட்,

மதராஸ்.

ஆயுளுள்ளவரை ஆயுள்வேதமும் அவசியம் நஸ்யம்! நஸ்யம்! வெகு ஜன வஸ்யம், வஸ்யம் எனக் கூறுவது வேயுள் (மாடம்) முதலிய வெகு சுகம் இருந்தாலும் இடைவிடாமல் விரும்புவது எது?

அகிலத்திலுள்ள அழகிய நகர்தோறும் அரண்மனைதோறும் கோகிலங்கள் கூவுஞ் சோலைகள்சூழ் சிற்றூர்தோறும் சென்று ஜெயம் பெற்ற ஜெகமெச்சிய ஜெயராம் முதலியார் பொடி பொடி பிடி பிடி

என்று விளம்பும்

எங்கள்

தென் இந்தியா

பொடிக்களஞ்சியப் பொடியே

விலாசம்:—தென் இந்தியா பொடிக்களஞ்சியம்,

147, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, ஜியார்ஜ் டவுன், மதராஸ்.

மானேஜர், உலகப் பிரசித்திப்பெற்ற

ஷண்முக முதலியார் பௌத்திரர் ஆர். கே. ஜெயராம் முதலியார்

TEETH TREATED SUPPLIED

7 A.M. TO 12 NOON.

2 P.M. TO 6 P.M.

Dr. S. J. MORO.

DENTAL SURGEON.

3/256, CHINA BAZAAR, ROAD.

(OPP. TO FLOWER — BAZAAR POLICE STATION) MADRAS.

த்ரிமூலிகா தைலம்

உஷ்ணத்தினால் ஏற்படும் சகலவிதமான நோய்களுக்கும், கண்ணெரிச்சல், தலை கிறுகிறுப்பு, மண்டை இடி, குன்மம், இன்னும் பித்தத்தினால் ஏற்படும் சகல நோய்களையும் நிவர்த்தி செய்யும். இது ஓர் ஆபூர்வ சஞ்சீவித் தைலம். 8 அவுன்ஸ் புட்டி ரு. 1-4-0. லக்ஷ்மி மார்க்கு யூகலிப்ட்ஸ் ஆயில் சுத்தமானது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் இன்றியமையாதது.

½ அ. புட்டி டஜன் 1க்கு ரூ. 1-2-0.
1 அ. புட்டி டஜன் 1க்கு ரூ. 1-14-0.
4 அ. புட்டி டஜன் 1க்கு ரூ. 5-10-0.
} பாக்கிங், தபால் பார்சல் சிலவு வேறு.

கமலா அண்டு கோ.,

65, ராமசாமி தெருவு, ஜி. டி., மதராஸ்.

பகுள பஞ்சமி தினம்

(ஈ. கிருஷ்ணய்யர்)

எவ்வளவோ கச்சேரிகள் நடக்கின்றன. பஜனைகள் நடக்கின்றன. சங்கீத மகாநாடுகள் நடைபெறுகின்றன. கர்நாடக சங்கீதம் புத்துயிர் பெற்று விட்டதாக வருணிக்கின்றார்கள். நமது தென்னிந்திய சங்கீதத்தை ஒரு நாளும் வாடாத நறுமலராய், மேலும் மேலும் ஒளி பெறும் ஜீவசக்தியாக ஆக்கிய மகா புருஷன் யார்? அவர்தான் தியாக ப்ரும்மம்! இந்தியா வென்றால் காந்திஜி யென்பர் வெளி நாட்டார். அதே மாதிரி தென்னிந்திய சங்கீத மென்றால் தியாகராஜஸ்வாமி என்ற பரம பாகவதரின் பெயரே எல்லோர் நினைவுக்கும் வருகிறது. அவரது பெயரில் அமோகமான சக்தி யிருக்கிறது. இன்றைக்கும் ஆயிரக் கணக்கான சங்கீதத் தொழிலாளருக்கு ஜீவனம்சம் அளிக்கின்றன அம்மகானின் பாடல்கள்! அப்பேர்ப்பட்ட மகானின் புண்ணிய தினத்தை இரண்டு வாரங்களுக்கு முன்னே சங்கீதக் கோஷ்டிகள் கொண்டாடின. திருவையாறு என்ற திவ்விய க்ஷேத்திரத்தில் அம்மகானுக்கு வித்வான்கள் சங்கீதக் காணிக்கை செலுத்தினார்கள். அம்மகான் இயற்றிய பாடல்கள் காதுக்குச் சுவை யளிப்பது மட்டுமா? இல்லை. அவை தெய்வ பக்தியும் ஊட்டுபவை. ஜீவன் முக்திக்கான ஏணிகள் அவரது பாடல்கள்!

கேட்ட மாத்திரத்தில் பரவசமாக்கும் சங்கீதமும் அதை உலகுக்கு அளிக்கும் பெரியாரும் பல நூற்றாண்டுகளில் சிலரே தோன்றுவர். அச்சிலரிலும் முதன்மையாக அவதரித்தோர் தியாகராஜர். சுமார் 173 வருஷங்களுக்கு முன் பிறந்து, எண்பத்து எட்டு வயது வரை உலகில் வாழ்ந்து, சுமார் எண்பத்து ஆறு வருஷத்துக்கு முன் அப்பெரியார் சமாதி யடைந்தார். அவரை நினைத்து ஆராதனை செய்யும் தினமாம் அவ் வெள்ளிக்கிழமை, புஷ்யபகுள பஞ்சமி என்பர். உலகில் அரசர்களிடத்தும் பிரபுக்களிடத்தும் ஆதரவை எதிர்பாராது, கடவுளையே தாரகமாய்க் கொண்டு சரமாரியாய்ப் பொழிந்து வந்த சங்கீதமன்றோ அம்மகான் உலகத்துக்களித்தது! எனவே, அவர் பாட்டுக்கள், எத்தடையுமின்றி, எவரிடமும், எங்கு பார்க்கினும் உலவி வருவது ஆச்சரியமல்ல. அதுவே நமது நாட்டின் உண்மையான ஆத்மாவின் அம்சமோ எனலாம்.

ஓர் ஆந்திரப் பிராமணன். தமிழ் நாடு புனிதமடையத் திருவாரூரில் பிறந்தவர், திருவையாற்றில் வளர்ந்தவர். பஞ்சநத க்ஷேத்திரமாம் அவ்வூரை, தென்காசியாகப் புண்ணியம் பெறச் செய்தார். அவர் சரித்திரம் அறியாதாருளரோ? ராம ப்ரம்மம் என்ற பரம பாகவத புருஷனுக்கு மூன்றாவது புத்திரராகப் பிறந்து, தஞ்சை ஸொண்டி வெங்கடரமணய்யரிடம் சங்கீதப் பயிற்சி பெற்று, காஞ்சியிலிருந்து வந்ததோர் பாகவதோத்தமரிடம் ராம நாம தாரக மந்திரோபதேசம் பெற்று, அதை வெகுகாலம் சித்த சுத்தியுடன் மனனம் செய்த தன் பயனாக ஸ்ரீராமபிரானின் தரிசனமும் அருளும் பெற்று, அன்று தொட்டு முத்து முத்தாகக் கீர்த்தனைகள் செய்ய வாரம்பித்தார். பிறகு, நாரதராகவே கருதப்படும் ஒரு மகானின் அருளால் 'ஸ்வரார்ணவம்' என்ற நூலையும் பெற்று, சங்கீத சாஸ்திரமே பெருவாரி பரவுமாறு ஞானத்துடன் மேன்மேலும் பாடல்களைப் பொழிந்தார். தமது சகோதரரால் இடுக்கண்களடைந்தும் பொருட்படுத்தாது, அர்ச்சகர்கள் பிரபுக்களுடைய ஆதரவையும் நிராகரித்து, ராமார்ப்பணமாகவே பாடல்களைப் பொழிந்து, யாவராலும் போற்றப்பட்டு, பல புண்ணிய க்ஷேத்திரங்களையும் தெய்வங்களையும் தரிசித்து, இல்லறம் நடத்தினார். மனைவி இறந்த சில நாள் கழித்து, தனக்கும் காலம் நெருங்கவே சந்நியாசம் பூண்டு, அப்புஷ்யபகுள பஞ்சமி தினத்தன்று சமாதி யடைந்தார்.

அன்னார் சங்கீதத்துக்குச் செய்த சேவையையும் அறியாதாருளரோ? ஏராளமாகக் கீர்த்தனைகளைப் பொழிந்தாரென்பது ஒன்று; அக்கீர்த்தனைகளுக்கு அவர் காலத்துக்கு முன் இல்லாத கச்சிதமான உருவமும் கொடுத்தார். அவர் காலத்துக்கு முன் சாதாரணமான பாட்டுக்களில், ஸாஹித்தியம் நிறைந்தும், அநேகமாய் ஒரே மாதிரியாகவே பாடும் வண்ணமே யமைந்திருந்தன. அப்பெரியாரோ, தம் ஞான பலத்தால், தகுந்த ஸாஹித்தியத்துடன் ஸங்கீதத்துக்கும் அதிக இடம் கொடுத்து, ஒரு ஸாஹித்தியத் துணுக்கையே பலவாறு பாடுமாறு சங்கதி அமைத்தல் என்ற விசேஷத்தை ஏற்படுத்தினர். தவிர, அநேக அபூர்வ ராகங்களை வெளிக் கொணர்ந்தார். அவர் செய்த கீர்த்தனங்களினால்தான் இக்காலத்தில் நடமாடும் அநேக அபூர்வ ராகங்களின் உருவம் தெரிகின்றன. ஒவ்வொரு கீர்த்தனையிலும் ஓர் ராகத்தின் சில சில விசேஷ அம்சங்களைப் பொறுக்கி அமைத்திருக்கிறார். எனவே அவர் கீர்த்தனைகளைப் பாடம் செய்வோர் அந்தந்த ராகங்களையும் பாடும் ஞானம் படைத்தோராகும் வசதியை எளிதில் அடைகிறார்கள். எனவே, அவர் பாடல்களின் மகிமையைக் கொண்டாடா திருக்க முடியுமா? அவர் ஞாபக தினத்தைச் சிறப்பிக்காதிருக்க முடியுமா? ஆந்திர பாஷையில் எழுதினும், தமிழ் நாட்டிலேயே பெரிதும் பரவிப் போற்றப்படுவன அவரது பாடல்கள். அவைகளைக் கற்றோரே பெரியோர்; அவைகளைக் கேட்போரே உண்மையான ரஸிகர். அவைகளைக் கேட்டு ஆனந்திப்போரே புனிதராவர். திருவை யாற்றிலுள்ள அவரது சமாதியில் மாத்திர மல்ல; சங்கீதம் அறிந்தோர், பாடுவோர், அபிமானம் கொண்டோர் யாவர் மனதிலும் உருவெடுத்திருப்போராம் புண்ணிய புருஷரே தியாக ராஜஸ்வாமி.

பொது உடைமை நிர்வாகம்

(சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்)

தனி மனிதருக்குச் சொத்துரிமை இருப்பதால், அவர்கள் அதை நன்றாக நிர்வகிக்கிறார்கள். பொது உடைமை ஸ்தாபிதமாகி விட்டால், இதே மாதிரி நிர்வகிப்பார்களா என்று அநேகர் சந்தேகிக்கிறார்கள். தற்பொழுதைய நிலைமையில் ஏற்பட்டிருக்கும் சில தப்பபிப்பிராயங்கள்தான் இந்த சந்தேகத்துக்குக் காரணம். இப்பொழுது பல நிர்வாகங்கள் பொதுவில் நடக்கின்றன. ஆனால், தனி மனிதர் சொத்துரிமைக்கு நடுவேதான் அவையும் நடக்கின்றன. அவற்றில் உள்ள ஊழல்களைக் கொண்டு, எல்லாம் பொது உடைமையாகும் ராஜ்யத்திலும் இப்படித் தானிருக்கும் என்று எண்ணி விடலாகாது. இப்பொழுது, தன் தன் சொந்த லாபத்தில் ஒவ்வொரு மனிதரும் கண்ணா யிருக்கிறார்கள். தனி மனிதருக்குச் சொத்துரிமையே கிடையாதென்று மாற்றி விட்டால், அப்பொழுது நமது நோக்கங்களில் அடியோடு ஒரு புரட்சி—மாறுதல்—ஏற்பட்டு விடும்.

ஆறெல்லாம் கரைபுரண்டு தண்ணீர் வெள்ளமாய் ஓடுகையில், கொஞ்சம் ஜலத்தை எடுத்து வந்து வீட்டுக்குள் பூட்டி வைத்துக் கொள்ளுவீர்களோ? மாட்டீர்களல்லவா? இதேமாதிரிதான், எல்லா சொத்தும் எல்லாருக்கும் சொந்தமான பொது உடைமையாகி விடும் போது, யாரும் திருட மாட்டார்கள்; பொதுச் சொத்தைத் தஸ்கரம் செய்து தனியாய்ச் சொந்தத்துக்குச் சேர்த்து வைக்கவு மாட்டார்கள்.

பார்க்கப்போனால், சொத்து என்பதுதான் என்ன என்று நினைக்கிறீர்கள்? மனிதருக்கு உடை, உணவு முதலிய பண்டங்கள் தேவையா யிருக்கின்றன. இந்தப் பண்டங்களை உற்பத்தி செய்வதற்கு அனுகுணமான முறையில், உலகிலுள்ள நில பலம் முதலிய தளவாடங்களைச் சில ஏற்பாடுகளுக்கு உட்படுத்தி வைத்திருக்கிறோம். உணவு, உடை முதலிய பண்டங்களை, மனிதர்கள் தனித்தனியாகவும் உற்பத்தி செய்யலாம்; கூட்டுறவு கொண்டு ஐக்கியமாகவும் விளைவிக்கலாம். பஞ்ச காலத்தில், உணவு உடைகளை ஒன்று திரட்டி, எல்லாருக்கும் பகிர்ந்து கொடுப்பதில்லையா? யுத்த காலத்தில், ராஜாங்கமே உணவு, உடை விஷயத்தில் கட்டுப்பாடுகள் செய்து விடுகின்றதல்லவா? முன் காலத்தில் தனி மனிதர் செய்து வந்த லேவாதேவித் தொழிலை, இக்காலத்தில் பல பங்குதார் சேர்ந்த ஐக்கிய நாணயச் சங்கம் பொதுவில் நடத்தி வருகின்றதல்லவா? ஐக்கிய நிதி யென்றால், எல்லாரும் பொறுக்கிக்கொள்ளும்படியாய்த் தெருவில் வாரியிறைத்து விடுவது என்று அர்த்தமல்ல. ஐக்கிய நிதி, எந்த ஒருவருக்கும் சொந்தமல்ல; அது எல்லாருடையவும் பொதுச் சொத்து. பொது உடைமை என்றால், தேசத்தின் செல்வம் தெருவெல்லாம் சிந்திக் கிடக்கும் என்று அர்த்தமல்ல; அதனால் விளையும் லாபங்களைத்தான் எல்லாரும் பங்கிட்டுக் கொள்ளுவார்கள்.

பொது உடைமை ராஜ்யத்தில் ஒவ்வொருவனும் தன் வசம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் சொத்தை, தேசத்தின் தர்மகர்த்தாவைப் போல் பரிபாலனம் செய்வான். நெல் வயல்களை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். அவற்றைச் சமத்துவமாகப் பங்கிடவேண்டும் என்கிறோம். அதாவது விவசாயமே செய்ய முடியாதபடி சிறு சிறு துண்டுகளாக எல்லாருக்கும் வேலி போட்டுக் கொடுத்துவிட வேண்டுமென்று பொருளல்ல. நெற் பயிர் செய்வதற்குச் சௌகரியமான விஸ்தீரணமுள்ள பல நிலங்களாகப் பகுத்து விடவேண்டும். விவசாயம் செய்வதற்குத் தகுதிவாய்ந்த கிருஷிகரிடம் அவை ஒப்படைக்கப்படும். இதே மாதிரிதான், மில் முதலிய இயந்திரங்களையும் நிர்வகிப்போம்.

ஒரு விசேஷம் என்னவென்றால், பொது உடைமை ராஜ்யத்தில், தந்தையின் வசமுள்ள சொத்துத் தனக்குக் கிடைத்துவிடும் என்று, மகன் வாரிசு பாத்தியம் கொண்டாட முடியாது. நான் ஒரு பொக்கிஷ உத்தியோகஸ்தனாகவோ, கோயில் தர்மகர்த்தாவாகவோ, தாசில்தாராகவோ இருக்கிறேன் என்று வைத்துக் கொள்ளுங்கள். நான் நிர்வகிக்கும் பணம் தனக்குக் கிடைக்கும் என்று என் மகன் எண்ணிவிட முடியுமோ? முடியாதல்லவா? ஆனால், தன் தந்தையின் சொந்த சொத்தோ தனக்குக் கிடைக்குமென்று மகன் நாவில் ஜலம் ஊற ‘நொட்டை’ விட்டுக்கொண்டிருக்கிறான். பொது உடைமை ராஜ்யத்தில் இந்தச் சங்கதி நடவாது. ஏனென்றால், அதில் தேசத்தின் சகல சொத்தும் தேச முழுவதற்கும் சொந்தமான தர்ம சொத்தாகப் பாவித்தே நிர்வகிக்கப்படும்.

சில காரியங்களைத் தனி மனிதர்தான் நன்றாகச் செய்யமுடியும்; வேறு சில காரியங்களைக் கூட்டங்கள்தான் நன்கு புரிய முடியும். தனி மனிதர் செய்யக்கூடியவற்றைத் தனிமனிதரிடமும், கூட்டங்கள் செய்யவேண்டியவற்றைச் சபைகளிடமுமே ஒப்படைப்பார்கள். ஆனால், எவனும் எச்சபையும், தான் நிர்வகிக்கும் காரியத்தைத் தன் சொந்தமாகப் பாவித்து நடக்கமாட்டார்கள்.

நீர் ஒரு சித்திரக்காரர் என்று வைத்துக்கொள்ளும். நீர் வரையும் சித்திரம் உமது மகனுக்கோ பேரனுக்கோ போய்ச் சேராமல், தேசத்துக்கே சொந்தமாகப் போகிறது என்று நினைத்துக்கொள்ளும். நீர் நன்றாய்த்தானே எழுதுவீர்? நீர் ஒரு சிற்பியானால், வீட்டைவிட ஒரு கோயிலைத்தானே அதிக அழகாய்க் கட்ட முயலுவீர்? தனி மனிதர்களுக்கே சொத்துரிமையுள்ள இந்தக் காலத்தில் கூட, தங்கள் சொந்தக் காரியங்களைவிடப் பொதுக் காரியங்களையே அதிக கவனத்துடன் செய்யும் அநேக நண்பர்களை எனக்குத் தெரியும். ஆகையால், சொத்தெல்லாம் பொது உடைமையாகிவிட்டால், அது நன்றாய் நிர்வகிக்கப்படாதோ என்று நீங்கள் அஞ்சவேண்டிய அவசியமில்லை.

[இது Chats Behind Bars என்ற ஆங்கிலப் புத்தகத்தினின்றும் எடுக்கப்பட்டது.]

கதரை அணியுங்கள்

ஜெர்மனியில் ‘நாஜி’ இயக்கம்

(“அரவணையான்” எழுதியது)

‘டாக்கி’யில் சில தினங்களுக்கு முன்தான் நான் அந்த முகத்தைப் பார்த்தேன். அப்பா! என்ன ஆவேசம்! என்ன ஆட்டம்! என்ன கம்பீரம்! என்ன தீரம்! ஹெர் ஹிட்லர்—ஜெர்மன் தேசத்தை இன்று தனியரசு செய்யும் சர்வாதிகாரி—சில நிமிஷ நேரம் தான் பேசினான். அவனுடைய ஜெர்மன் பாஷை எனக்குப் புரியவில்லை. அதைப்பற்றி யாரும் கவலைப்பட்டிருக்க முடியாது. அவன் வதனத்தின், உடம்பின், கரங்களின் பாஷை பளிச்சுப் பளிச்சென்று உள்ளத்தில் தைக்கும்படி யிருந்தது. தேசத்தின் அவமானத்தைக்கண்டு உள்ளம் சகிக்காது தோன்றிய கோபக்கனலிலே உதித்த ஒரு அக்னிப் பந்துபோல் அவன் காணப்பட்டான். அவன் பேச்சு, அபிநயம், தோற்றம் எல்லாம் ஒரு அபூர்வ மாதிரியாகத்தா னிருந்தன; ஆனால், அவற்றிலே பாசாங்கோ, அற்பத்தனமோ, கோழைத்தனமோ இல்லை. ஆம்! இந்த மனிதனுக்குத் தேசவெறி பிடித்திருக்கிறது என்பதற்கு ஆட்சேபனையே இல்லை யென்று தோன்றிற்று.

ஜெர்மனியில் இந்த ஹிட்லர் தோன்றியதற்குக் காரணமென்ன? இவனுக்கும் இவனது இயக்கத்துக்கும் அபாரமான செல்வாக்கு உண்டானதன் ரகசிய மென்ன? இதற்கெல்லாம், சென்ற மகா யுத்தத்தில் ஜயமடைந்த வல்லரசுகளின் தலைகால் புரியாத நடவடிக்கைகளே ஓரளவு காரணம் என்று சொல்லலாம். ஹிட்லரே சொல்லுகிறான்: “நம்மை ஜயித்த வல்லரசுகள் என்ன நினைத்துக்கொண்டிருக்கின்றன, தெரியுமா? தோல்வியடைந்தவனை, ஊழிக் காலம் வரையில், ஓயாமல், புரட்டிப் புரட்டி, தலையெடுக்க முடியாமல் உதைத்துக் கொண்டே யிருக்கலாம் என்றுதான் நினைத்துக்கொண்டிருக்கின்றன.” ஹிட்லரின் சொற்களிலே ஆத்திரம் பொங்குகிறது. ஆனால், ‘நேச’ வல்லரசுகளின் போக்கைக் கவனித்தால், இவ்வாத்திரத்தின் காரணம் நமக்கு விளங்கும்.

ஆயுதப் பரிகரண மகாநாடு என்ற ஒன்று கூடிக் கூடிக் கலைவதாய்ச் சொல்லுகிறார்க ளல்லவா? பெர்னார்ட் ஷா சொல்லுவதேபோல, இந்த மகா நாட்டினர் என்ன சாதிக்கிறார்கள், தெரியுமா? “16 அங்குல பீரங்கி செய்வது கொஞ்சம் அதிகச் செலவாய்த்தா னிருக்கிறது. இனிமேல் உங்களை நான் 10 அங்குல பீரங்கியால் சுடுகிறேனே. அதில் உங்களுக்கு ஆட்சேப மிராதே?” இந்தமாதிரி படை குறைப்பைப்பற்றிப் பேசுகிறார்களேயன்றிப் படையொழிப்பைப்பற்றிப் பேசுவோர் இல்லை. ஆனால், ஜெர்மனிமட்டில் என்றென்றும், எல்லோருக்கும் கீழாகவே ஆயுத பலம் வைத்துக்கொண்டிருக்க வேண்டும் என்கிறார்கள். யுத்த நஷ்டஈடு என்ற ஒரு மாளாச் சுமையை ஜெர்மனிமீது பலமாய்ச் சுமத்தி யிருந்தார்கள். சேனைப் பலத்திலே தாழ்வு, செல்வ நிலையிலே பாரம் இப்படித் தலைநிமிர்த்த முடியாதபடி தேசம் திணறுவதைக் கண்ட ஹிட்லர், “தேசம்! தேசம்” என்ற மந்திரத்தை உச்சரித்துக்கொண்டு எழுந்தான். வார்சேல்ஸ் ஒப்பந்தத்தை மறுத்தான்; சர்வதேசச் சங்கத்தைவிட்டுத் தன் நாட்டை விலக்கிக்கொண்டான்.

ஹிட்லர் ஒரு பிரும்மசாரி. தேசத்தின்மீது அடங்காக் காதல் கொண்டவன். சோர்ந்து கிடந்த நாட்டைத் தட்டி யெழுப்புவதற்காக, அவன்பட்ட சிரமங்கள் கொஞ்சம் நஞ்சமன்று. அவனைக் கொல்வதற்காகவும் சிலர் சூழ்ச்சிகள் செய்ததுண்டு. சாவுக்கும் அஞ்சாமல், இல்லற இன்பத்தையும் வெறுத்துத் தேச வெறியே குறியாகக்கொண்ட இந்த வீரன் ஜர்மன் இளைஞர்கள் மனதைக் கொள்ளைகொண்டு விட்டான். ஹிட்லரின் ‘ஸ்வஸ்திகா’க் கொடியின் கீழ் நூற்றுக்கணக்கான வாலிபர், மாணவர்கள், தொழிலாளிகள், அரசவம்சத்தினர் அனைவரும் அணிவகுத்து நிற்கின்றனர். அந்தத் துடிதுடிப்புள்ள இளைஞர்களின் அணிவகுப்பைக் கண்டு ஹிட்லர் நிமிர்ந்து நின்று ஐரோப்பாவில் பேசுகின்றான். ஏன் பேசமாட்டான்?

(நாஜி இயக்க இளைஞர்கள்)

நாசி இயக்கம் இரத்தவெறி கொண்டதுபோல, மற்ற நாட்டவர் சித்திரம் செய்து கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக அடியிற் கண்ட படம் ஒரு இங்கிலாந்துப் பத்திரிகையில் வெளியான விபரீதச் சித்தரிப்பாகும்.

“யாரோ என்றோ தோற்றதற்காக, ஒரு தேசம் எல்லாக் காலத்தும் முழங்காற்படியிட்டே கிடக்கமுடியுமா? ஜெர்மன் தேசத்துக்குப் பிற நாடுகளுடன் சம

அந்தஸ்து வேண்டும்" இதுதான் ஹிட்லரின் ஆசை. அதற்காக, அவன் மற்றவரைப் போலவே, தனது நாடும் சமத்துவமாக ஆயுதபலம் பெறவேண்டும் என்று ஆசைப்படுகிறான்.

ஹிட்லர் ராஜ்யத்திலே, யூதர்கள் துன்புறுத்தப் படுத்தப்படுவது வருந்தத்தக்க விஷயந்தான். யூதர்கள் செல்வமும் பதவியும் பெற்று, நாசி இயக்கத்துக்குப் பலத்த எதிர்ப்புத் தந்ததால் விளைந்த ஆத்திரம்தான் இதன் காரணம். ஹிட்லர் இருக்குமிடத்திலிருந்து, ஜெர்மனியின் கண்களுடன் பார்த்தால், சர்வதேச சமரஸம் சாத்தியமில்லையென்றுதான் தோன்றும். யூதர்கள் சர்வதேச சமரஸம் பேசிக்கொண்டிருந்தது தேசத்திற்கே தீங்கு என்று ஹிட்லர் நினைத்தான். பொது உடைமை பேசிக்கொண்டிருந்த கட்சியார்களையும் அவனுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் வெறும் வாய்ப் பேச்சுப் பேசி, ஆகாயக் கோட்டை கட்டிக்கொண்டிருந்ததைப் பார்த்த அவனுக்கு அவர்களிடம் அருவருப்பே உண்டாயிற்று. இந்த ஆத்திரங்களால், அவன் சற்று மிதமிஞ்சிப் போயிருக்கக் கூடுமென்பது வாஸ்தவமே. ஆனால், அவனுடைய தேச பக்தியை யாரும் மறுக்க முடியாது.

பாமர மக்களுக்குத் தேச வெறியை ஊட்ட வேண்டுமென்பது அவன் ஆசை. "பரம சத்துருக்களும் கைகுலுக்கித் தழுவுவது அறிவாளிகளுக்கு அழகாயிருக்கலாம். பாமர மக்களோ, ஜயம் அல்லது அபஜயம் இந்த இரண்டி லொன்றைத்தான் விளங்கிக் கொள்ளுவார்கள்" என்பது அவன் தத்துவம். இதனால், அவன் எதிரிகளை அடக்கி ஒடுக்கவே முயல்கிறான்.

"கீழ் வகுப்போர் உயரவேண்டும். உயர் வகுப்பினரைத் தாழ்த்துவதாலல்ல, கீழ் வகுப்பினரை உயர்த்துவதாலேயே இதனைச் சாதிக்கமுடியும்" என்பது அவன் சூத்திரம். இதனால், அவனது தேசப் புனருத்தாரணத் திட்டத்திலே, நடுத்தர முதலாளிகளுக்கு இடம் இருக்கிறது; ஏழைகளும் தொழிலாளரும் உயர்வதற்கு மார்க்கமுண்டு. ஆனால், அவன் பொது உடைமை பேசவில்லை.

"சின்ன விஷயமோ, பெரிய விஷயமோ எதிலும் சரி; வாய் பேசாமல் தலைவன் கட்டளையை மற்றவர் சிரமேல் தாங்கி நடக்கவேண்டும்" என்பதுதான் அவன் இயக்கத்தின் முக்கிய தத்துவம். ஏனெனில், அவன் காரியக்காரன்.

"ராஜாங்கம் இன்ன ரூபத்தில்தான் இருக்க வேண்டுமென்பது எங்கள் கொள்கையல்ல. குடியரசுதான் வேண்டுமென்றோ, முடியரசே ஸ்தாபிதமாக வேண்டுமென்றோ நாங்கள் சொல்லவில்லை. உரம்பெற்ற ஒரு ராஜாங்கத்திற்கு இன்றியமையாத அடிப்படையான லட்சணங்களை உண்டாக்கி விடவேண்டும்; வலிமையும் கட்டுப்பாடும் கொண்ட ஒரு ஜெர்மன் ராஜ்யத்தை ஸ்தாபித்து விடவேண்டும். இதுவே எங்கள் இலட்சியம்" என்று ஹிட்லர் சொல்லுகிறான். தேச வெறியை அடிவலுவாய்க் கொண்ட நாஜி இயக்கம் இதைத்தான் செய்ய முயன்றுகொண்டிருக்கிறது என்று பல அறிஞரும் சொல்லுகிறார்கள்.

மந்திர மகிமை

(பண்டித மதன்மோகன் மாளவியா எழுதியது)

விலை அணா 2.

இந்த அரிய நூலில் பண்டித மாளவியாஜீ, அஷ்டாக்ஷரம், பஞ்சாக்ஷரம் ஆகிய மந்திரங்களின் மகிமையை, வேத சாஸ்திர புராணேதிகாச ஆதாரங்களுடனும் பல மேற்கோள்களாலும் விளக்கி எழுதியிருக்கிறார். நேர்த்தியான தமிழ் மொழிபெயர்ப்பு. ஹிந்து மதாபிமானிகள் யாவரும் படித்துப் பயனடையவேண்டிய நூலாகும்.

நந்தனார் கீர்த்தனைச் சுருக்கம்

(தொகுத்தவர்: சக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார்)

விலை அணா 2.

கோபாலகிருஷ்ண பாரதியாரின் நந்தனார் சரித்திரக் கீர்த்தனைகளில் முக்கியமான பலவற்றையும் ராஜாஜீ பொறுக்கித் தொகுத்திருக்கிறார். மாஜி ஹைகோர்ட் ஜட்ஜி வி. பாஷ்யம் அய்யங்காரின் நேர்த்தியான முகவுரையுடன் கூடியது. சுத்தமான பதிப்பு. டெம்மி 1×8 அளவில் 50 பக்கங்கள்.

சுதந்திரச்சங்கு புத்தகசாலை

திருவல்லிக்கேணி, சென்னை.

"ருஷ்யாவைப் பாரு!"

ருஷ்யா என்றாலே சிலருக்குக் "கிலி"; வேறு சிலரோ புதிய உலகத்துக்கு வழி காட்டியா யிருப்பது-அஸ்திவாரம் போட்டிருப்பது-ருஷ்யாதான் என்று கூறுகின்றனர். எது எப்படியானாலும் ருஷ்யாவின் சில அபிவிருத்திகள் மிகவும் அதிசயிக்கத் தக்கனவா யிருக்கின்றன என்பதில் மாத்திரம் ஆட்சேபனை கிடையாது. பத்திரிகைகள் விஷயத்தில் ருஷ்யா அடைந்திருக்கும் தீவிர முன்னேற்றத்தைப் பற்றி "லிவிங் ஏஜ்" என்ற சஞ்சிகை தந்திருக்கும் சில விவரங்களை நம் நாட்டுப் பத்திராதிபர்களும் பத்திரிகாபிமானிகளும் மனத்தில் நன்றாக முடிந்து போட்டுக்கொண்டால் நலமாயிருக்கும்.

"ருஷ்யாவில் பொது உடைமை அரசியல் ஸ்தாபிதமாவதற்கு முன் இருந்த பத்திரிகைகள் 467 தான்; அவற்றின் மொத்தச் சந்தாதாரரோ 20 லட்சம் பேர். இப்பொழுதோ 5400 பத்திரிகைகள் நடக்கின்றன; சந்தாதார் தொகையோ 3 கோடியே 80 லட்ச மாகிவிட்டது.

"ருஷ்யப் பத்திரிகைகள் என்னென்ன சங்கதிகளை வெளியிடக் கூடாது என்று சர்க்கார் கட்டுப்பாடு செய்திருக்கிறது, தெரியுமா? என்னென்ன கட்டுப்பாடுகளைப் பத்திராதிபர்களும் அநுஷ்டிக்கின்றார்கள், தெரியுமா? ருஷியாவிலுள்ள பத்திரிகைகளில்,

(1) வீண் அவதூறுகள் காணப்படமாட்டா;
(2) சமையல் குறிப்புகளுக்கு இடம் கிடையாது;
(3) ஆடையாபரண அலங்காரங்களை வர்ணிக்கக்கூடாது;
(4) போட்டிப் பந்தயங்கள் நடத்துவது தடுக்கப்பட்டிருக்கிறது;
(5) டென்னிஸ், கிரிக்கட் முதலிய விளையாட்டுச் செய்திகளைப் போடுவதில்லை;
(6) மார்க்கட் நிலவரங்களைப் புகுத்துவதில்லை.

"இவற்றைப் போட்டு நிறைக்காமல், (1) கலை, (2) இலக்கியம் (3) அயல் நாட்டுச் செய்திகள் (4) சர்க்கார் முடிவுகள் (5) கட்சி நடவடிக்கைகள் (6) சிறு தொழில் நடத்தும் முறைகள் முதலிய விஷயங்களை வெளியிடுவதிலேயே ருஷ்யப் பத்திரிகைகள் கண்ணுங் கருத்துமா யிருக்கின்றன."



கதை சொன்ன 'ஸர்வாண்டி'

(கெண்டாமணி எழுதியது)

'அவிவேக பூரண குருகதை' என்ற புத்தகத்தை நாம் வாசித்திருக்கிறோம். அதே மாதிரி ஒரு மடையனைக் கதாநாயகனை வைத்துப் பெரிய புத்தகமொன்றை எழுதினவன் ஸர்வாண்டி என்பான். 'டான்குவிக்ஸாட்' என்ற புத்தகத்தை வாசித்தவர்கள் அக்கதையை எழுதிய ஆசிரியனை ஒருபோதும் மறக்கமாட்டார்கள். ஸர்வாண்டி வெறும் பேனாக்காரன் மட்டுமல்ல; நல்ல வீரன், தேசபக்தன், கஷ்டப்பட்டவன். அவன் எழுதிய கதையைவிட அவனுடைய கதையே வெகு ஆவேசமுடையதா யிருக்கிறது.

ஸ்பெயின் தேசத்திலே ஏழைக் குடியானவ வம்சத்திலே ஸர்வாண்டி பிறந்தான். பையனா யிருக்கும்போதே அவனுக்குப் படிப்பின்மேல் ஆசை அதிகமிருந்தது. கிழிந்து போன சமாசாரப் பத்திரிகைகளை யெல்லாம் பல தடவை அவன் படித்ததுண்டு. இருபது வயதுக்குள் அவன் உயர்தரப் படிப்பையும் முடித்து விட்டான்.

வெறும் புத்தகப் புழுவாக இருக்க, ஸர்வாண்டி விரும்பவில்லை. 1570-ம் வருஷத்தில் துருக்கிஸ்தானத்துக்கும் கிறிஸ்துவர்கட்கும் பலமான போராட்டம் நடந்துகொண்டிருந்தது. ஸர்வாண்டி ஓர் மாலுமி வீரனைக் கப்பற் படையில் சேர்ந்து கொண்டு போர்க் கடலை யடைந்தான். மிக்க கோரமான சண்டை நடந்தது. துருக்கிக் கப்பலில் ஏராளமான அடிமைகள் கட்டப்பட்டிருப்பதாகச் செய்தி கிடைக்கவே, அந்தச் சகோதரர்களை மீட்பதற்காக ஸ்பானியர்கள் அபார வீரங் காட்டினார்கள். ஸர்வாண்டியும் அன்று கடும் போர் புரிந்தான்.

"எனது ஒரு கையால் கத்தியை வீசிக்கொண் டிருந்தேன். இன்னொரு கையில் இரத்தம் பீறிட்டுக்கொண் டிருந்தது. திடீரென்று என்மீது ஓர் வாள் வீச்சு விழுந்தது. நான் மூர்ச்சையானேன். விழித்துப் பார்க்கும்போது எனது இடது கை மொண்டியாகி விட்டதென்று அறிந்தேன். ஆனால் எனது வலது கை எனக்குப் புகழ் தந்ததல்லவா?" என்று சுய சரிதத்தில் ஸர்வாண்டி சொல்லி யிருக்கின்றான். அன்று எதிரிகள் தோற்று ஓடினர். 12000 அடிமைகளுக்கும் விடுதலை தரப்பட்டது. இதைவிட ஓர் வீரனுக்குச் சந்தோஷம் தருவது வேறுண்டோ?

ஒரு கையை இழந்த இந்த வீரன், போர்த் தலைவனிடம் ஒரு சிபார்சுக் கடிதத்தை வாங்கிக்கொண்டு தனது சகோதரனோடு தாய்நாடு நோக்கித் திரும்பினான். திரும்பி வரும்போது அவன் வந்த கப்பல் அல்ஜியர்ஸ் தேசத்துக் கடற் கொள்ளைக்காரர்களால் கைப்பற்றப்பட்டது. அநேக ஆயிரம் அடிமைகளை விடுதலை செய்த வீரன் அன்றைக்கு அடிமை யாக்கப்பட்டான். இந்தக் கைதியின் மடியிலிருந்த கடிதத்தைக் கொள்ளைக்காரர் பார்த்தனர். "இவன் ஒரு பெரிய ஆள். இவனை அடிமையாக வைத்திருந்தால் இவன் உறவினருக்கு இடுதண்டம் விதித்து நிறையப் பணம் வசூலிக்கலாம்" என்ற முடிவுக்கு வந்தனர். தங்களுடைய தீவுக்குக் கொண்டுபோய் அடிமைகளோடு அடிமையாக வீரனையும் விலங்கிட்டு வைத்திருந்தனர்.

ஆனால் அவனுக்கு வேலையேதும் தரவில்லை. ஆகவே ஓழிந்த வேளைகளில் இந்தக் கைதி இதர அடிமைகளுக்கு என்னென்ன சவுகரியம் செய்து கொடுக்க முடியுமோ அவைகளைச் செய்துகொண் டிருந்தான். வெகுநாள் அவன் வீணா யிருக்கவில்லை. சில நண்பர்களைச் சேர்த்துக்கொண்டு தீவினின்று தப்பியோடிவிட முயற்சித்தான். முயற்சி தோல்வியுற்றது. கள்வர் தலைவன், ஸர்வாண்டிக்காக 'இடுதண்டப் பணம்' கிடைக்குமென ஆசைப்பட்டுக் கொண்டிருந்தபடியால், அப்போது அவனைக் கொல்லாது விட்டுவிட்டான்.

ஸர்வாண்டியும் அவனது சகோதரனும் இந்தமாதிரி அடிமைகளாகப் பட்டிருக்கும் செய்தி நாளடைவில் ஸ்பெயினுக்குத் தெரிந்தது. அவனது கிராமவாசிகளெல்லாம் தங்கள் நண்பனை மீட்க வேண்டுமென்பதற்காக ஏதோ கொஞ்சம் பணம் சேகரித்தார்கள். கள்வர் தலைவனுக்குச் செய்தியனுப்பி பணத்தைப் பெற்றுக்கொண்டு ஸர்வாண்டியை விடுதலை செய்யுமாறு கேட்டுக்கொண்டனர். ஆசை மிகுந்த கள்வர் தலைவனுக்கு ருசி அதிகமாகி விட்டது. அதிகமாகப் பணம் கேட்டான்!

ஸர்வாண்டியின் தாய் தந்தையர் தங்கள் மைந்தர்களைச் சிறைமீட்க எண்ணி, தங்கள் சொத்துக்களை யெல்லாம் விற்றனர்; ஸர்வாண்டியின் சகோதரிகள் தங்கள் நகைகளையெல்லாம் தந்தனர். அப்படிப் பணம் சேர்த்தும் போதவில்லை. ஆயினும் அந்தப் பணத்தைத் தந்து தனது சகோதரனை மீட்டுக் கொண்டு போய் விடும்படி ஸர்வாண்டி தனது உறவினருக்குச் செய்தி அனுப்பினான். கொஞ்ச காலத்துக்குள் ஸர்வாண்டியின் சகோதரன் விடுதலை பெற்றான். இவ்வாறு ஸர்வாண்டியின் சகோதர வாஞ்சை சரித்திரத்தில் இடம் பெற்றுவிட்டது.

பிறகு தப்பியோடுவதற்காக வீரன் பன்முறை முயன்றும் பலிக்கவில்லை. கல்லும் சங்கிலியும்தான் அதிகமாயின. ஒரு தடவை ஸர்வாண்டி ஸ்பெயின் அரசனுக்கு ஒரு கடிதம் அனுப்பினான். அல்ஜியர்ஸ் தீவுக்குப் படையெடுத்து வருமாறும் வந்தால் நல்ல சமயத்தில் தான் உள்ளேயே குழப்பத்தை விளைவித்து வெற்றி உண்டாக்கித் தருவதாகவும் 25 ஆயிரம் அடிமைகளுக்குச் சுதந்திரம் தரலாமென்றும் அக்கடிதத்தில் கண்டிருந்தான். கடிதம் ஸ்பெயின் அரசனை அடைவதற்குப் பதிலாக கள்வர் தலைவன் கையில் சிக்கிக்கொண்டது.

ஊருக்குப் போன சகோதரன் அங்கு யாராரையோ கெஞ்சிக் கூத்தாடிப் பணம் சேகரித்துக் கள்வர் தலைவனுக்கு அனுப்பவே ஸர்வாண்டி விடுதலை யடைந்தான். ஐந்து வருஷ அடிமை வாழ்வு நீங்கி, தன் தாய் நாட்டிற்குத் குத் திரும்பி வந்ததும் அந்தத் தேசபக்தன் மாத்ரு பூமியின் மண்ணை எடு

த்து முத்தமிட்டானும். ஸர்வாண்டி நேரே 'பிலிப்' வேந்தனிடம் சென்று உடனே ஒரு படை திரட்டித் தர வேண்டுமென்றும் அல்ஜியர்ஸுக்குச் சென்று கள்ளர் கூட்டத்தை ஒழித்து அங்கு அடைபட்டுக் கிடக்கும் 25 ஆயிரம் அடிமைகளுக்காகச் சுதந்திரப் போர் செய்ய வேண்டுமென்றும் கூறினான். அரசனுக்கு என்ன அக்கரை? யார் அடிமையாயிருந்தால், அவனுக்கென்ன?

பாவம்! வரவர ஸர்வாண்டிக்குச் சாப்பாடு கிடைப்பதுகூடக் கஷ்டமாகி விட்டது. ஒரு தடவை அவனை அகாரணமாகப் பிடித்துச் சிறையில்கூட ராஜாங்கம் போட்டுவிட்டது. அப்போதுதான் அவன் "டான்குவிக்ஸாட்" என்ற கதையை எழுதத் தொடங்கினான். வெளியே வந்து புத்தகங்களெழுதியும் சிறிய சிறிய உத்யோகங்களை ஏற்றும் ரொம்பக் கஷ்டப்பட்டான். இங்கிலாந்தை எதிர்த்து ஸ்பெயின் அரசாங்கம் 'ஆர்மாடா' என்ற கப்பற்படையை அனுப்பிய போது அந்த ஆர்மாடாவில் ஸர்வாண்டியும் ஓர் சேவகனாக வந்திருந்தானும். ஆங்கிலேயர் அதையெல்லாம் மறந்து ஸர்வாண்டியின் புத்தகங்களை இன்றைக்கும் படித்து வருகின்றனர். சுகமாக ஆண்ட பிலிப் அரசனின் பெயரை யாராவது சொல்கின்றார்களா? ஆனால் கஷ்ட வாழ்க்கை வாழ்ந்த ஸர்வாண்டியின் பெயரோ இன்றைக்கும் சாகாதிருந்து வருகிறது

வ. வே. சு. அய்யர் எழுதிய

மங்கையர்க்கரசியின்

காதல்

முதலிய கதைகள்

விலை அணா 8

சுதந்திரச்சங்கு புத்தகசாலை

திருவல்லிக்கேணி, சென்னை.

குழந்தையின் கேள்வி

"ஜோதி"

1. எமக்கினிய உணவளித்துக்
காத்தருளும் அன்னாய்!
எனக்குள்ள சந்தேகம்
சில போக்கல் வேண்டும்.
தமக்கினிய பொருள் என்று
தாரணியில் மனிதர்
தகுதியிலா உடைகளெலாம் உடம்பினிலே பொருத்திச்
சமக்குமது என்னே? பொன் நகைகளெனப் பாரம்
சுமந்திடு மங்கையர்க்கவற்றால் சங்கடங்கள் இலையோ?
அழுக்கி வளைகளைக் கையில் அணிவதனாற்பயனென்?
அம்மா நீ சொலவேண்டும், என்மனத்தில் உறவே.

2. செடிகளிலே ஒளிர் மலரைச் சிறையொடித்தப்போற்
சேர்த்தறுத்துச் செருகுவதால் என்னபயன் உண்டோ?
மடிகளிலே தலைப்பினிலே பணம்முடிப்பர் அவைதாம்
வருத்தமுற உறுத்துவதும் அவர்க்கிலையோ? என்றும்
துடிதுடித்தே பணம்பணமென் றியம்பிஉண விழந்தே
தூக்கமற அலைந்துசுகம் பறிகொடுத்த லென்னே?
விடியுமட்டும் நாடகமாம் யோசனையாம் எல்லாம்
வீணலவோ? வீணலவோ? புகன்றிடுவாய் அம்மா!

3. நீரிருக்க நெல்லிருக்க நிலவுலகில் வீணே
நினைத்தபல உணவுகளை உண்டுசிறி தேனும்
சீரிருக்கும் வயிற்றினிலே இடமிருக்க ஒட்டாச்
செயலுடைய மாந்தர்சுகம் என்னபெறு கின்றார்?
பாரிருக்கும் பலபொருளுந் தம்வீட்டிற் குவித்துப்
பரபரப்போ டவைபழுது படின்அழுவ தென்னே?
ஊரிருக்கும் பேரெல்லாம் உறவன்றோ? பிறர் தம்
உயர்வுகண்டு துன்புறுதல் என்? சொல்வாய் அம்மா!

நவஜீவன்:—இந்தியாவில் தயாரிக்கப்படும் டானிக்குகளில் நவஜீவன் மிகச் சிறந்தது. 1 புட்டி விலை ரூ. 2 தான். சாஸ்த்ரீக முறையில் எல்லா வியாதிகளுக்கும் மருந்து தயாரிக்கப்படுகின்றது.

பிருங்காமலக தைலம்:—மிகவும் குளிர்ச்சியைத் தரக்கூடியதும், மயிரைக் கருக்கவும் வளரவும் செய்யக்கூடிய மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட உயர்ந்த தைலம். 1 புட்டி விலை ரூ. 1. ஒரே புட்டியில் குணம் தெரியும்.

தென் இந்தியா பார்மசியூடிகல்ஸ், (லிமிடெட்.,) நெ. 60, லிங்கச்செட்டித் தெருவு, சென்னை.

பேனுப் பித்தம்

[எழுதுவது இன்பமூட்டும் பொழுதுபோக்காக இருந்தது ஓர் காலத்தில். பின்னர் அது ஓர் கௌரவமான தொழிலாகவும் வளர்ந்து விட்டது. எழுதுவதை இன்பமாகவும் கருதாமல், தொழிலாகவும் நினையாமல் எப்போதும்பேனுப் பித்துப் பிடித்து எழுதி எழுதித் தள்ளுகின்றவர் சிலர் உலகிலுண்டு. அத்தகைய பேனுப் பித்தன் ஒருவனை செகா-f (Tchekoff) என்ற ருஷிய நாடகாசிரியன் 'கடற்பறவை' என்ற நாடகத்தில் நுழைத்திருக்கின்ருன். திரிகோரி என்ற ஓர் ஆசிரியனை நைனு என்பவள் கண்டு வியக்கின்ருள். சம்பாஷணை நடக்கின்றது.]

ஆசிரியன் :—பெண்களுக்கு பத்தொன்பதாவது வயது வருகின்றதே, அப்போது அவர்கள் மனேபாவம் எவ்வாறிருக்குமோ? நான் புத்தகங்களில் ஏதேதோ எழுதியிருந்தாலும் அந்தமாதிரி இருக்கவே இருக்காதுபோலிருக்கிறதே! ஒரு மணி நேரமாவது நீயாக நான் மாறி, கூடுவிட்டுக் கூடு பாய்ந்து, உனக்கெப்படி இந்த உலகம் தோன்றுகிறதென்பதை அறியவேண்டுமென்று ஆசை ஏற்படுகிறது.

நைனு :—ஆமாம், எனக்கும்தான்! ஒரே ஒரு மணி நேரம் போதும்! எனது நிலை என் மனதுக்குப் பிடிக்கவில்லை. எனக்கும் இன்னெருவராக மாறவேண்டுமென்று ஆசையாயிருக்கிறது.

ஆசி :—உனக்குக் கூடவா?

நைனு :—ஆமாம்! உங்களைப் போன்ற புலவர்களாயிருந்தால் மனம் எப்படியிருக்குமென்பதை உணரவேண்டுமென்பது எனது ஆசை. 'புகழ்' என்கிருர்களே, அது என்ன? புகழ் வரும்போது உங்களுக்கு உணர்ச்சி எப்படி இருக்கிறது?

ஆசி :—புகழா? அது வரும்போது ஒன்றும் பிரமாதமாயில்லை. (யோசித்துவிட்டு) நீ என்னைப் பிரமாதமாக வருணித்துப் பேசுகிருய்! அவ்வளவுதான். அது என்னமோ 'புகழ்' என்ருல் எப்படியிருக்குமென்பது எனக்குச் சொல்ல வரவில்லை; புரியவுமில்லை.

நைனு :—புரியவில்லையா? பத்திரிகைகளில் உங்களைப் பற்றிப் பத்தி பத்தியாய் எழுதியிருப்பதை நீங்கள் படிக்கும்போது கூடவா அது புரிவதில்லை!

ஆசி :—ஓ! அதைச் சொல்கிருயா—சரி--என்னைத் தூக்கிவைத்து யாராவது எழுதும்போது எனக்குச் சந்தோஷமாய்த்தானிருக்கிறது. ஆனல் யாராவது என்னை ஒரு தடவை கண்டித்துவிட்டால்—போச்சு—இரண்டு நாளைக்கு என்னவோபோலிருக்கிறது.

நைனு :—இந்த உலகமே ஒரு பெரிய வேடிக்கையையா! ஹூம்.—உங்கள் வாழ்வின்மீது நான் எவ்வளவு பொருமை கொண்டிருக்கிறேன், தெரியுமா? உலகில் மனிதர் பல தினுஸு! பல ரகங்கள்! சிலருடைய வாழ்வு சோம்பேரித்தனமாக நகர்கின்றது; யாதொரு பிரயோசனமுமில்லாமல் வாழ்ந்து செத்துப் போகிருர்கள்; லோகத்தின் கூட்டத்தில் அவர்களிருந்த இடமே தெரியாது போகிறது. ஆனல் லக்ஷத்தில் யாரோ ஒருவன்தான் பிரகாசித்துப் புறப்படுகின்ருன். அத்தகைய புகழ் பெற்றவர்களில் ஒருவரான உங்கள் அதிருஷ்டத்தை நான் என்னென்பேன்?

ஆசி :—நானு? அதிருஷ்டசாலியா? ஹூம்-புகழ் என்ருய், கீர்த்தி என்ருய், அதிருஷ்டம் என்ருய்-எல்லாம் எனக்குக் கேட்கக் கேட்கத் தித்திக்கிறது. லட்டு மாதிரி—ஆனல் நான் லட்டுச் சாப்பிட்டதேயில்லை—உனக்கு இன்னும் வயதாகவில்லையல்லவா? ஆதலால் நீ ரொம்பப் பிரியமாகவும் பேசுகிருய்.

நைனு :—உங்கள் வாழ்க்கை அவ்வளவு அழகாயிருக்கிறதே என்றுதான் நான் பிரமித்து நிற்கின்றேன்.

ஆசிரி :—அழகா? என் வாழ்க்கையையா அழகு என்கிருய்.—(கெடியாரத்தைப் பார்த்துவிட்டு) கோபித்துக் கொள்ளாதே! நான் உடனே போகவேண்டும். எழுத ஆரம்பிக்க வேண்டும், ரொம்ப அவசரம். (சிரித்துக் கொண்டே) இந்த ஜோரான சமாசாரத்தைப் பற்றி—அது என் கதையாயிருப்பினும் இன்னெரு சமயம் நாம் பேசுவோம். (கொஞ்சம் யோசித்து) ஒரோர் சமயத்தில் நமது மூளையை ஏதோவொன்று பற்றிக் கொள்கிறதல்லவா? உதாரணமாக, சில தினங்களில் இராத்திரியும் பகலும் சந்திரனைப் பற்றிய நினைப்பே தலையில் சுழல்வதுண்டல்லவா? அந்த மாதிரி ஓர் 'மதி' என் மதியில் குடியிருக்கிறது. அதுவே சதா எனது ஞாபகம். அதுதான் எழுத்து! எழுத்து! எழுத்து! ஒரு புத்தகத்தை எழுதி முடித்தேனே இல்லையோ உடனே இன்னென்றைத் துவங்க ஏதோவொன்று தூண்டுகிறது. பிறகு மூன்றுவது புத்தகம்—நாலாவது—இப்படியே ரயில் வண்டி மாதிரி ஓடிக்கொண்டேயிருக்கிறது வாழ்க்கை: ஒரு கதையினின்று இன்னெரு கதைக்குத் தாவுவதுதான் ஸதா ஜோலி—சும்மாயிருக்கவோ முடிகிறதில்லை. இப்படிப்பட்ட வாழ்க்கையில் என்ன அழகு இருக்கிறது? இது சுத்தக் காட்டுமிராண்டித்தனமல்லவா? ஏதோ உன்னேடு பேசிக்கொண்டிருக்கும் போது கொஞ்சம் மனதுக்கு இன்பமாய்த்தானிருக்கிறது. ஆனல் வீட்டில் அரையும் குறையுமாய் எழுதி வைத்துவிட்டு வந்திருக்கிறேனே அந்தக் கதையைப் பற்றி என்னல், இப்போதுகூட மறக்கவே முடிகிறதில்லை. அதோ அங்கே பிடில் மாதிரி ரூபத்தோடு ஆகாயத்தில் நகர்கின்ற அந்த மேகக்கூட்டத்தைக் கண்கள் பார்க்கின்றன; சரி—இதை ஒரு கதையில் விடவேண்டும் என்று மனது உருப்போடத் தொடங்குகிறது. நீ பேசுகிறபோதோ நான் பேசுகிறபோதோ நல்ல வார்த்தைகள் வந்துவிட்டால்—அதை எனது இலக்கிய கஜானவில் போட்டு, உடனே பூட்டி வைக்கின்றேன். என்றைக்காவது அந்த வார்த்தைகள் எழுதுவதற்கு உபயோகப்படுமல்லவா! சரி. ஏதாவது எழுதித் துலைத்துவிட்டேனென்று வைத்துக் கொள். வேலை முடிந்தவுடன் நாடகக் கொட்டகைக்கோ, குளத்தங்கரைக்கோ சென்று 'ஹாய்' ஆக இருக்கலாமென்று போகிறேன். ஆனல் போன இடத்திலெல்லாம் என் கதைக்கென்று ஏதாவது கண்ணில் தென்பட்டுக் கொண்டேயிருக்கின்றது. மூளை ஏதோ சுழன்று கொண்டேயிருக்கிறது. மறுபடியும் கடுதாசி என்னைக் கூப்பிடுகிருப் போலிருக்கிறது. போக வேண்டியதுதான். பின்பு எழுத்து--எழுத்து—எழுத்து—மறுபடியும் எழுத்துத்தான். இப்படியே ஸதா நடக்கின்றது விவகாரம். வருஷங்கள் ஓடுகின்றன. அடடா! ஆயுள் இப்படிப் போகலாமாவென்று நினைத்தாலும் என்னல் வேறென்றும் செய்ய முடியவில்லையே! என் கண்ணுக்குப் படாமல் அநேக ஆயிரம் பேர் காத்துக்

கொண்டிருக்கிறார்களாம். அவர்களுக்கெல்லாம் நான் வாரந்தோறும் தேன் ஸப்ளை செய்ய வேண்டுமாம். அதற்காகப் பல புஷ்பங்களினின்று நான் சேர்க்கவேண்டும். எங்கெங்கு பூத்தனவோ அந்தச் செடிகளைப் பிடுங்கிப் போட்டு நான் துவைத்துத் தீர்க்கின்றேன். இப்படி ஒரு பைத்தியக்காரன் தானே செய்வான். என்னைத் தெரிந்தவர்கள் எனக்கு மூளைக்கோளாறு இருப்பதாகச் சொல்ல மாட்டோமென்கிறார்கள். பழைய ஏருடி கதைதான். எல்லாருடைய புகழ் மொழிகளும் என்னை ஏமாற்றுவதற்காகச் சொல்வது போலிருக்கிறது. நான்தான் பித்தனாச்சே, எல்லாருக்கும் என்னை ஏமாற்றுவது சுலபந்தானே! ஒரு வேளை நம்மைப் பயித்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிடுவார்களோ என்று கூட நான் எண்ணுவதுண்டு. இப்படியாக நல்ல இளமைப் பருவமெல்லாம் எழுதி எழுதித் தொலைந்துகொண்டேயிருக்கிறது. புதிதாக ஒருவன் எழுதப் புறப்படுவதாக வைத்துக் கொள்—அவன் எழுத்தை யாரும் பொருட்படுத்தவில்லையானால், அவன் படும்பாடு இருக்கிறதே அப்பப்பா—சொல்ல முடியாது. தான் இந்த உலகத்தின் வீண்சுமையென்றும் கூட்டத்தில் யாரோ ஒருவன் என்றும் அவன் எண்ணமிடுகின்றான். அவனது நரம்பெல்லாம் எப்போது அறுந்துவிடலாமென்று விறைத்து நிற்கின்றன. கலை, சித்திரம் என்று பேசிக்கொண்டு அலைபவரை அவன் துரத்த ஆரம்பிக்கின்றான். அவர்களைச் சுற்றியே கும்மியடிக்கின்றான். வித்வான்களின் கண்களைப் பார்க்கப் பார்க்க அவனுக்கு ஏதோ பயம் உண்டாகின்றது. சீட்டாட்டத்தில் காசையெல்லாம் தோற்றுவிட்டு ஆனால் ஆசையோடு ஆட்டத்தை மட்டும் பார்த்து வயிறெரிகின்றவன் மாதிரி, புதிதாய் முளைத்த ஆசிரியன் எல்லாரையும் முழித்து முழித்துப் பார்க்கின்றான். இப்போது நான்தான் எழுதுகின்றேனே — அவைகளை யார் யார் படிக்கின்றார்கள் என்பதை நான் அறிவேனா? அவர்களனைவரின் தொகையைப் பற்றி நினைத்தாலே எனக்குப் பயமாய்த்தானிருக்கிறது. அத்தனை பேரும் என்னைப் பிடுங்குகிறார்கள்.

நைனா:—அது வாஸ்தவமா? நீங்கள் ஒரு கதையைப் புதிதாகச் சிருஷ்டிக்கின்றீர்களே, அப்போது கூடவா உங்களுக்குச் சந்தோஷம் ஏற்படுவதில்லை.

ஆசிரி:—ஆம். சந்தோஷம்தான். அதோடு புரூ-f படிக்கும் தொழிலையும் சேர்த்துக்கொள். சந்தோஷத்தின் கனவு அப்போது விளங்கும். புத்தகத்தை அச்சிட்டு வெளியே அனுப்பிவிட்டேனோ இல்லையோ, பிறகு அதைக் கண்ணால் பார்க்கக்கூட எனக்குப் பிடிப்பதில்லை. ஆனால் பொது ஜனங்களோ படித்துவிட்டு நற்சாட்சிப் பத்திரம் தர முற்படுகிறார்கள். "இவர் எழுதுவது எல்லாம் நன்றாய்த்தானிருக்கிறது; என்ன இருந்தாலும் டால்ஸ்டாய் எழுதுவதுபோ லில்லை" என்று சிலர் சொல்லிவிடுகின்றார்கள். ஆனால் நான் சாகின்றவரை "அது பேஷ்—இது ஷோக்" என்று சொல்லிக்கொண்டேயிருக்கும் ஓர் கூட்டம் நான் செத்தான பின்பு என்னைப் பற்றிக் கவனிக்கவே போகிறதில்லை. ஆனால் நான் மட்டும் ஓயாது பேனாவை ஓட்டிய வண்ணமாயிருக்கிறேன்.

நைனா:—அய்யா! என்னென்னமோ சொல்கிறீர்களே! நீங்கள் சொல்வது ஒன்றும் எனக்கு விளங்கக் காணோமே. வெற்றி பெற்றுப் பெற்று மனக்கோழையாகி விட்டீர்கள் நீங்கள்.

ஆசிரி:—வெற்றியா? ஆசிரியரென்ற எனக்குச் சந்தோஷ மேற்பட்டதேயில்லை. வெற்றியும் கிடையாது. என்னை எனக்கே பிடிக்கமாட்டேனென்கிறது. மூளையிலே ஏதோ புகையைவிட்டு ஜனங்கள் குழப்பிவிடுகிறார்கள். இந்த ஏரியையும், இந்த மரங்களையும், நீல ஆகாயத்தையும் எல்லோருமே பார்க்கின்றோம். நான் இவைகளைப்பற்றி எதற்காக எழுதவேண்டும்? ஆனால் ஏதோ எழுதவேண்டுமென்ற ஒன்றேதான் எனது ஆசையாயுமிருக்கிறது; மட்டுக்கு அடங்காத ஆசை. நாட்டுப்புற வாழ்வைப்பற்றி அறிவது போலவே எனக்குப் பட்டணவாசிகள் பழக்கமும் வேண்டுமென்று இருக்கிறது. நமது இந்தத் தேசத்தையும், சகோதர மக்களையும் நான் நேசிக்கிறேன். ஆகவே அவர்களுக்குள்ள குறைகளைத் தீர்க்கவேண்டியவன் நான்தான் என நினைத்துக்கொள்கின்றேன். மேலும் ஸயன்ஸ், உரிமை என்று சில சரக்குகள் நம்மிடம் அகப்பட்டுக்கொண்டு தவிக்கின்றன. ஏதோ எழுதி எழுதி ஊரை ஸதா ஏய்த்துக்கொண்டிருக்க முற்படுகின்றேன். ஜனங்களுக்கும் எனக்கும் பரஸ்பர ஏய்ப்புத்தான் கண்ட பலன்.

நைனா:— உங்களுக்கு உங்கள் எழுத்துமேலே நம்பிக்கையில்லைப் போலிருக்கிறதே. இப்படியிருப்பதுண்டா? எல்லோரும் உங்களைப் 'பெரியவர்' 'பெரியவர்' என்று போற்றுகிறார்கள். எனக்கு மட்டும் உங்களைப் போல எழுதத்தெரிந்தால் நமது தேச மக்களுக்காக உழைப்பதையே வாழ்வின் லட்சியமாக்கிக் கொண்டு விடுவேன். கடைசியாக என்னை ஊராரனைவரும் ஊர்வலமாக அழைத்துச் செல்வார்கள். அப்போது என்ன சுகம்! என்ன சுகம்!

* * *

ஆசிரி:—என்ன சுகம்! ஆ! உன் பேச்சினின்று ஒரு கருத்து எனக்கு எழுதக் கிடைத்து விட்டது. ஒரு சிறு கதைக்குச் சிறந்த விஷயம் கிடைத்து விட்டது! உன்னைப் போல ஒரு பெண் ஏரிக்கரையில் வளர்கின்றாள். கடற் பறவைபோலச் சுதந்திரமாக வாழ அவள் விரும்புகின்றாள். ஆனால் ஒரு ஆள் குறுக்கே முளைக்கின்றான். அவளது வாழ்வைக் குருவியைச் சுட்டுத் தள்ளுவது போலச் சுட்டு ஒழித்துவிடுகின்றான். இது நல்ல கதை யல்லவா?

(நைனா இதைக்கேட்டுப் பிரமிக்கின்றாள்.)

BOOKS OF THE HOUR

	Rs.	A.
By Mahatma Gandhi		
Satyagraha in South Africa ...	4	8
Young India—I (1919-22) ...	4	0
Young India—II (1924-26) ...	4	0
A Guide to Health ...	0	12
Neethi Dharma ...	0	8
Indian Home Rule ...	0	8
By C. Rajagopalachar		
Chats Behind Bars ...	0	6
By Romain Rolland		
Mahatma Gandhi—a study ...	0	8
By Mahadev Desai		
Gandhiji in Indian Villages ...	2	0
Gandhiji in Ceylon ...	1	4
By Rajendra Prasad		
Candhiji in Champaran ...	2	8
By Krishna Das		
Seven Months with Mahatma Gandhi ...	3	8

Swathanthra Sangu Book Depot
8-c, Pycrofts Road,
Triplicane, Madras.

பெயரில் என்ன இருக்கிறது

(அநாமதேயம்)

"பாப்பாவுக்கு என்ன பெயர் வைக்கிறது?" என்று வீட்டிலுள்ளோர் அனைவரும் மீட்டிங் கூடி ஆலோசிப்பது சர்வ சாதாரணக் காட்சி. மனைவி தன் பெற்றோர் பெயரை வைக்கவேண்டுமென வாதாடுவாள். புருஷன் தன் பெற்றோர் பெயரை வைக்க வேண்டுமெனக் கட்சிகூறுவான். கடைசியில் உரக்கப் பேசும் கட்சி ஜெயமடைகிறது. ஏதோ ஒரு தாத்தாவின் பெயரையோ பாட்டியின் பெயரையோ குழந்தைக்கு வைத்து விடுகிறார்கள்; அல்லது குல தெய்வத்தின் பெயரையாவது வைத்து விடுகிறார்கள்.

தெய்வத்தின் பெயரைப் பிள்ளைக்கு வைத்து விட்டால், சாகும்போது 'நாராயணா' என்று கூப்பிட்டால் அதனால் மோட்சம் கிடைத்துவிடுமென்பது அநேகருடைய நம்பிக்கை. இவ்வளவு சுலபமாக மோட்சத்திற்கு ஒரு 'அஜாமீளன்' போயிருக்கலாம். ஆனால் இந்தக் கலியுகத்தில் அவ்வளவு சுலபமாகத் தெய்வ தூதர்களை ஏமாற்றிவிட முடியாதென்பதைத் தாழ்மையோடும் சாஸ்திர பூர்வமாகவும் அன்பர்களுக்கு தெரியப்படுத்திக் கொள்கிறேன். மோட்சம் என்று ஒன்றிருந்தால், அதற்கு நாமும் போவதாயிருந்தால், அதற்கு இந்த டிக்கட் இனிமேல் செல்லாது என்பது எனது அபிப்பிராயம்.

தெய்வங்களின் பெயர்களை வைத்தால் குழந்தைகளுக்குத் தெய்வ அம்சங்களும், நாளடைவில் தெய்வ பக்தியும் ஏற்படலாமென்பது இன்னொரு சாராரின் நம்பிக்கை. ஆனால் நடப்பிலோ வேறு விதமாயிருக்கிறது. இன்றைக்கு நாஸ்திகப் பிரசாரம் பண்ணிக்கொண்டு அலைகின்ற பல பேர்வழிகளுக்கு முதல் தரமான தெய்வங்களின் பெயர்களைத்தான் அவர்கள் பெற்றோர்கள் வைத்திருக்கின்றார்கள். ஆகவே இந்தப் பிரயத்தனமும் தோல்வி யென்றுதான் சொல்லவேண்டும். தமிழ் நாட்டிலுள்ள மனிதர்களின் பெயர்களைப் பார்த்தால் எத்தனை சுப்பிரமணியர்கள், எத்தனை கிருஷ்ணமூர்த்திகள், எத்தனை ராமமூர்த்திகள், எத்தனை வெங்கட்ராமர்கள்! இப்படி யிருப்பதால் ஆளுக்கு ஆள் வித்யாசம் கண்டு பிடிப்பது அநேக இடங்களில் கஷ்டமாயிருக்கிறதல்லவா? இதை யெல்லாம் எண்ணும்போது குழந்தைகளுக்குப் பெயர் வைக்கையில் நாம் கொஞ்சம் யோசித்தே செய்யவேண்டுமென்று தோன்றுகிறது.

ஸோவியத் ருஷியாவிலே இப்போது எவ்வளவோ புதுமைகளோடு இன்னொரு புதிய விஷயமும் நடந்து வருகிறது. குழந்தைகளுக்கு 'எலெக்டிரிஸிடி,' 'ரேடியோ,' 'ரிடார்ட்' என்று, விஞ்ஞானப் பெயர்களை இஷ்டம் போல வைக்கின்றார்களாம். இது வேடிக்கையான செய்தியான போதிலும், இதில் ஓர் சவுகர்யமும் இருப்பதாகவே சொல்லவேண்டும். நாம் தேடும் மிஸ்டர் ரிடார்ட்டுக்கும், மிஸ்டர் பியூரெட்டுக்கும் நமக்கு வித்யாசம் தெரியாது போகாதல்லவா? ஸோவியத் ரஷியா இன்னொரு சீர்திருத்தத்தையும் செய்ததானால் நன்றாயிருக்குமென்று எனக்குப் படுகிறது. 1, 2, 3, 4 என்று வரிசையாக எண்களையே ஒவ்வொரு ஆளுக்கும் பெயராக சர்க்காரே நாமகரணம் செய்துவிட்டால், எவ்வளவோ ஸல்லிசாக இருக்குமன்றோ?

இதற்கு முன்னமேயே ஆங்கிலேய நாட்டில் குழந்தைகளின் நாமகரண விஷயத்தில் தாராளபுத்தி தோன்றிவிட்டதென்பது வாஸ்தவம். மிஸ்டர் f-ஆக்ஸ் என்று ஒருவர் பெயர் ஆனால் அவரை 'நரி' யென்று யாரும் தள்ளி விடுவதில்லை. மிஸ்டர் பிளாக் 'கறுப்பரெ'ன்று யாரும் எண்ணுவதில்லை. மிருகங்களின் பெயரையும் வர்ணங்களின் பெயரையும், பாத்திரங்களின் பெயரையும் சங்கோஜமின்றி வெள்ளைக்காரர் வைத்துக் கொள்ளத் தொடங்கினர். அதைப் பின்பற்றி நம்மவரும் கங்காளம், கல்சட்டி, கடப்பாறை, புளிமூட்டை, வாத்து, கொக்கு என்று பெயர் வைக்கவேண்டுமென்று நான் சொல்ல வரவில்லை. இப்போது நம்மிடையிருக்கும் நாமகரண சம்பிரதாயத்தில் ஏதாவது கொஞ்சம் சீர்திருத்தம் செய்ய முடியுமா என்பதுதான் பிரச்னை.

ஜாதிப்பெயர் விஷயத்திலும் எவ்வளவோ தகவல்கள் தோன்றி யிருக்கின்றன. 'படையாச்சி' இப்போது எந்தப் படையையும் ஆட்சி செய்யவில்லை. 'அய்யர்' இன்னொருவரிடம் சேவகம் செய்துதான் பிழைக்கிறார். 'ராஜா'வுக்குக் கால்காணிகூடச் சொத்துக் கிடையாது. தொழில் சம்பந்தத்தை யொட்டி ஏற்பட்ட ஜாதிப் பெயர்கள் பிரயோசன மற்று விட்டன. இப்போது எவ்வளவோ புதுப் புதுத் தொழில்கள் தோன்றி யிருக்கின்றன. அததற்கேற்ப ஜாதிப் பெயர்களையும் சிருஷ்டிக்கவாவது வேண்டும். அல்லது ஜாதிப் பெயர்களைக் கொஞ்சம் கொஞ்சம் மறப்பதற்கு முயற்சிக்க வேண்டும். அச்சாபீஸ் வைத்திருக்கும் அப்பாசாமியை 'அப்பாசாமி அச்சுக்குத்தி' என்று அழைப்பதா? பஸ் ஓட்டும் பார்த்தசாரதியை 'பார்த்தஸாரதி பஸ்ஸோட்டி' என்று அழைப்பதா? அதுவும் நாகரிகமாகத் தோன்றவில்லை. பம்பாயில் பார்ஸிக்காரர்கள் மட்டும் தொழிலுக்கேற்பப் பெயர் வைக்கும் வழக்கத்தை வெகு காலமாகப் பழக்கத்தில் கொண்டு வந்திருக்கிறார்கள். சோடா விற்பவன் வீட்டில் பிறந்த குழந்தையை 'சோடாவாலா' என்று கூப்பிடுகின்றனர். பாட்டில் விற்பவன் வீட்டில் பிறந்த குழந்தை 'பாட்டில் வாலா' என்ற பெயரை அடைகிறது. 'வாட்டர் ஷெட்' வைத்திருப்பவன் பிள்ளை வாட்டர் வாலா ஆகிறது. ஆனால் "ஸோடா வாட்டர் பாட்டில் வாலா" மட்டும் இன்னும் அங்கு தோன்றவில்லையாம். ஆனால் இந்த முறை தமிழ்நாட்டில் சாத்தியமில்லை யென்றுதான் நினைக்க வேண்டி யிருக்கிறது. நிற்க,

பெயரைக் குழந்தைகளுக்கு வைக்கும்போது முழநீளம் வைக்கவேண்டுமோ வென்று கேட்கின்றேன். சிவராமபால கிருஷ்ணதாஸன் என்று ஒரு பெயர். அந்தப் பெயரையுடையவன் தனது தகப்பனார் பெயரோடு சேர்த்துக் கையெழுத்து போடுவதற்குள் நாம் ஒரு தரம் ஹோட்டலுக்குப் போய்க் காப்பி சாப்பிட்டு வந்துவிடலாம். இப்படி நீளமாகப் பெயரை வைப்பானேன், பையன் பெரியவனான பின்பு 'A.B.C.D. பிள்ளை' என்று குறுக்கிக் கொள்வானேன்? பிறக்கும்போது

வைத்த நீளப் பெயர் ஒன்று, கூப்பிடும் செல்லப் பெயர் இன்னொன்று. குழந்தைக்குப் பெயர் வைக்கும்போதே சின்னப் பெயராய் நல்ல பெயராய் வைத்தா லென்ன?

தமிழ்நாட்டில் சில பெயர்கள் வாயால் உச்சரிக்க முடியாதபடி கடுகடுப்பாகவோ அல்லது அரவலிகத்தனமாகவோ இருக்கின்றன. பெயர்களைச் சொல்ல நான் விரும்பவில்லை இந்த அசட்டுப் பெயர்களையெல்லாம் தயவு செய்து கப்பலேற்றி விட்டால், நமக்கொன்றும் குறைவு வந்துவிடாது. வங்காளத்தைப் பாருங்கள். காதுக் கினிமையாகப் பெயர் வைப்பதுதான் அவர்கள் வழக்கம். சித்தரஞ்சனன், நரேந்திரன், ரவீந்திரன், சந்திரிகா, ஸரோஜா இந்தப் பெயர்களெல்லாம் எவ்வளவு நவீனமாக இருக்கின்றன! அதேமாதிரி நல்ல நவீனப் பெயர்களை வைத்து நமது குழந்தைகளைக் கூப்பிட்டால் என்ன குறைவு? நமது மூதாதைகளும் தெய்வங்களும் நம்மைச் சபிக்க மாட்டா வென்று நான் வாக்குக் கொடுக்கின்றேன்.

இவ்வளவு சொன்னேனே, என் பெயர் என்ன தெரியுமா? ரொம்ப சகஜமான பெயர். ஆகவே அதை நான் சொல்லமாட்டேன்.

விலை அணா இரண்டே! முந்துங்கள்!!

ஸ்ரீமான் S. G. கிட்டப்பாவின் சரித்திரம்

காலஞ்சென்ற சங்கீத வித்வான் ஸ்ரீமான் கிட்டப்பாவின் சரித்திரம் வெளிவந்துவிட்டது. 53 பக்கங்களும் 5 அழகிய படங்களையும் உடையது. ஸ்ரீ கிட்டப்பாவினிடம் நெருங்கிப் பழகிய தேசபக்தர் ஸ்ரீ. ஆக்கூர் அனந்தாச்சாரியரால் எழுதப் பெற்றது.

சங்கு ஏஜெண்டுகளுக்கு வியாபாரத்திற்காக ஸ்பெஷல் கமிஷன் கொடுக்கப்படும்; மாதிரிக் காப்பிக்கு 3 அணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும்.

விலாசம்:—

ஆக்கூர், அனந்தாச்சாரி,

ஆரிமுத்து ஆசாரி மேஸ்திரி தெரு,

திருவல்லிக்கேணி, சென்னை.

பாலர் பகுதி

சமயலறையில் சண்டை

("மார்க்கண்டேயன்" எழுதுவது)

ஒரு நாள் எங்கள் சமையலறையில் ஒரு சண்டை நடந்தது. உப்பு, பெருங்காயம், அரிசி, பாத்திரம் எல்லாம் அந்தச் சண்டையில் கலந்து கொண்டன. காட்டு மிருகங்களுக்கு ராஜா விருப்பது போலவும், நாட்டு ஜனங்களுக்கு ராஜா விருப்பது போலவும், சமையல் சாமான்களுக்கு யார் ராஜா வென்று பேச்சு ஏற்பட்டு, அந்தச் சண்டை வளர்ந்தது.

உப்பு சொல்லுகிறது: "எனக்குத்தான் ராஜாப் பட்டம் தர வேண்டும். ஏனென்றால் நானில்லாவிட்டால் சாப்பாடு நன்றாயிருப்பதில்லை. உப்பில்லாத குழம்பு சப்பென்றிருக்கும். உப்பில்லாத மோர் உதவாதல்லவா?" என்று கூறி உட்கார்ந்தது.

அரிசிக்குக் கோபம் வந்து விட்டது. "நானில்லாவிட்டால் உங்களை யார் தேடப்போகிறார்கள்? வெறும் சாதம் சாப்பிட்டுவிட்டு உலகத்தில் சிலர் வாழுகிறார்கள்! ஆனால் வெறும் உப்புத் தின்று யார் ஜீவிக்கிறார்கள்?" என்று கூறிற்று.

பாத்திரத்திற்குப் பொறுக்கக் கூடவில்லை. "உப்பே! உப்பே! உளறாதே. சர்க்கரைப் பொங்கலில் நீ நுழைகிறாயா? பாயஸத்தில் நீ உண்டா? ஏ அரிசியே! நீ அதிகமாக கர்வமடையாதே. வெள்ளைக்காரன் உன்னைத் தின்கிறானா? கோதுமை ரொட்டி சாப்பிட்டுவிட்டு எத்தனை பேரில்லை? ஆனால் பாத்திரமில்லாது ஒன்றும் செய்ய முடியாது. ஆதலால் ராஜா நான்தான்" என்று வெகு நேரம் பேசிற்று.

இப்படியே அங்கிருந்த ஒவ்வொரு சாமானும், தங்கள் தங்கள் பெருமையைப் பேசிக்கொண்டன. கடைசியாக அடுப்புக்கூடத் தன் வாயைக் காட்டியதுதான் ஆச்சரியம். "நானில்லாவிட்டால் பாத்திரம் எதற்கு? நெய் எதற்கு? அடுப்பில்லாவிட்டால் 'அம்மு' கிடையாது" என்று சிரித்துக் கொண்டே கூறிற்று.

அப்போது எனக்குத் தோன்றிற்று. "அடுப்பில்லாமல், அப்படியே பச்சையாய்க் கனிகளைத் தின்று ஜீவிக்கலாமென்று சொல்லுகிறார்களே, அப்படியிருக்க அடுப்பின் வாயடைக்காதா?" என்று எண்ணிக் கொண்டேன்.

கடைசியாக எல்லாம் ஒரு முடிவுக்கு வந்தன. அன்று சமையலில் அவரவர் சாமர்த்தியத்தைக் காட்டவேண்டும், எஜமான் யாருக்கு வோட்டுத் தருகிறாரோ அவன்தான் ராஜாவென்றும் எல்லாம் ஓர் முடிவுக்கு வந்தன. இந்தச் சாக்கிலாவது நமக்கு நல்ல சாப்பாடு கிடைக்கு மென்று வீட்டு எஜமானாகிய நான் நினைத்தேன்.

ஆனால் அவைகளின் அயோக்கியதனத்தைப் பாருங்கள். ஒவ்வொன்றுக்கும் தனக்கு ஓட் கிடைக்காது என்றே தோன்றிற்றுப் போலும். "தனக்கும் கிடைக்காது. ஆதலால் வேறு ஒருவருக்கும் கிடைக்கக் கூடாது. அதற்காகச் சமையலைக் கெடுத்து விடுவது" என்று ஒவ்வொன்றும் எண்ணி விட்டது.

அடுப்பு அதிகமாக எரிந்து சோற்றைக் குழைத்தது. சோறு மையக் கஞ்சிபோ லாயிற்று. உப்பு குழம்பில் நிறையப் புகுந்து கொண்டது. பாத்திரம் வேணுமென்றே ரஸத்தைக் கொட்டிவிட்டது. இப்படியாக அன்று சமையல் எல்லாம் வீணாய்ப் போகவே இதைப் பார்த்த எனது கோபம் தாள முடியவில்லை. அப்படியே பாத்திரத்தோடு எல்லாவற்றையும் கிணற்றிலெறிந்து விட்டேன். நான் எஜமானாயிருந்தும் அன்றைக்கு நான் பட்டினியாய்க் கிடந்தேன்.

நான் உயர்வு நீ உயர்த்தியில்லை என்று யாராரோ சண்டை போட்ட ஏற்பாடு கஷ்டமாய் முடிந்தது. இத்தகைய உயர்வு தாழ்வுச் சண்டைகளில், பாப்பா! நீ கலந்து கொள்ளாதே.

குரு கோவிந்த சிங்கன்

(வ. வே. சு. அய்யர் எழுதியது)

[பூர்வ கதை:—கோவிந்த ராயின் தந்தையான தேக பகதூரை டெல்லி பாதுஷா கைது செய்துவிட்டான். தன் அருமை மனைவி கூஜரி தேவியிடமும், புத்திரனிடமும் விடை பெற்றுக்கொள்ளும் சமயத்தில் தேக பகதூர் தன் மைந்தனிடம் "இந்த அதர்மம் 'அழியும்வரை இடைவிடாது நீ போர் செய்வாயா?" என்று கேட்கின்றான்.]

பிதாவின் சரீரத்தை மீட்டு வந்து அவனுக்குத் தகனக்கிரியைகளெல்லாம் செய்து முடிப்பதாயிற்று. ஏழைச் சிஷ்யர்கள் தைரியமாகக் கொலைக் களம் சென்று ஆத்ம ஹத்திகள் வரை அரிய தியாகங்கள் செய்து, தேகனுடைய உடலை மீட்டு வந்தார்கள். கோவிந்தன் பிதாவுக்குச் செய்யவேண்டிய கடனை முடித்துவிட்டு, முகலாய அரசாங்கத்தை வீழ்த்தும் உபாயத்தை ஆராய்வதற்காகச் சிஷ்யர்களுடன் ஆரணியத்துக்குள்ளே சென்று விட்டான்.

கோவிந்தன் கிஞ்சித்தேனும் சந்தேகமில்லாமல், "அவ்வாறே செய்கிறேன், தந்தையே; தங்களை அந்தக் கொடுங்கோலன் கொல்லத்தான் போகிறான். ஆனால் அறம் வெல்லும், பாவம் தோற்கும்! நான் என் பலத்தை வளர்த்துக்கொண்டு முகலாயர்களுடன் போர் செய்து தர்ம ராஜ்யத்தை ஸ்தாபிப்பேன். பாரத தேசத்தில் தர்ம சம்ஸ்தாபனம் செய்வதைத் தவிர வேறு கடமை நமக்கில்லை என்று நமது சிஷ்யர் உணரும்படி செய்து அதர்மும் கொடுங்கோலும் நாட்டில் இல்லாமற் போகும்படி ஆக்க முயல்வேன். தங்கள் ஆசீர்வாதத்தை எனக்குத் தந்தருள வேண்டும்!" என்று சொல்லி வணங்கினான். தர்மத்துக்காகத் தன்னையே பலிதானமாகக் கொடுக்கத் துணிந்த தேக பஹதூரின் முகத்தில் களிப்புக் குறி தோன்றிற்று. பாதத்தில் வீழ்ந்த தனயனை எடுத்து மார்புறத் தழுவி, "மகனே, நானகதேவனின் சக்தியும், அர்ஜ்ஜுன தேவனுடைய வீரமும், என் தந்தை ஹரிகோவிந்தனுடைய சௌரியமும் உன்னுள்ளே ஒருங்கே சேர்ந்து அரும்பியிருப்பதைக் காண்கிறேன். இத் தெய்வ குணங்கள் அதி சீக்கிரம் மலருக! அவை இப் பழம் பாரத நாட்டில் அறத்தை நிலவுறுத்தி, மறத்தினை அழித்திடுவதற்கே பயன் படுக! ஒன்று மாத்திரம் உன்னை வேண்டுவேன். என் உடலை முகலாயர் வசம் விட்டுவிடாதே. எப்படியாகிலும் அதைக் கொண்டுவந்து தகித்து எனக்குச் சாமக்கிரியைகள் செய்துவிடு!" என்று சொல்லி முடித்தான். கோவிந்தன் கண்களிலும், கூஜரி தேவி கண்களிலும், கண்ணீர் மல்கிப் பெருகிற்று. ஆனால் ஓர் நவயுகத்தின் தலைக்கடையில் தாங்கள் நிற்கிறோம் என்கிற உணர்ச்சி அவர்கள் இதயத்தை மறுபடியும் இரும்பாக்கியது. ஆகையால் துக்கத்தை யெல்லாம் அடக்கி வைத்துக் கொண்டு, அவர்கள் குருவை ஆலிங்கனம் செய்து, அவனைப் பிரிய உடன்பட்டார்கள்.

தேக பஹதூர் ஔரங்கஜேபின் தர்பார் சென்றான். அங்கே ஔரங்கஜேபு அவனை இஸ்லாம் மதத்தைத் தழுவச் சொன்னான். தேகபஹதூர், "என் உடம்பைத் துண்டு துண்டாக்கினாலும் என்னுடைய சமயத்தை விட்டு இஸ்லாம் சமயத்தை அங்கீகரிப்பேனா" என்று கர்வத்தோடு மறுமொழி சொன்னான். கடைசியாக ராஜாக்கினைப்படி தேக பஹதூரைச் சிரச்சேதம் செய்து விட்டார்கள்.

சிஷ்யர் கோவிந்தனைக் குரு பீடத்தில் ஏற்றி வைத்தார்கள். கோவிந்தனுடைய முதற் கடமை தன் பிதாவின் சரீரத்தை மீட்டு வந்து...

கோவிந்தன் பதினைந்து வயது பாலன். அவன் தலையில் தகப்பனுடைய கொலையைப் பழிவாங்கும் பாரமும் பாரத நாட்டினின்று கொடுங்கோலரசை ஓட்டும் பாரமும் வீழ்ந்தன. இந்தக் கடமைகளை நிறைவேற்றும் ஆற்றலைச் சம்பாதிப்பதற்காக, அவன் இருபது வருஷகாலம் காடுகளில் சஞ்சரித்துக்கொண்டு கல்வி கற்றும் கடுந் தவம் புரிந்தும் வந்தான். தேக பஹதூரின் ஆசீர்வாதம் அவனுக்குப் பரிபூரணமாகப் பலித்தது. நானக தேவனுடைய பக்தியும் நிஷ்டா சக்தியும் அவனுக்குச் சித்தித்தன. ஆயுதப் பயிற்சியில் தனக்கு யாரும் இணையில்லை என்று சொல்லும்படி ஒவ்வோர் ஆயுதத்தையும் கையாடுவதில் அவன் நிபுணனாகிவிட்டான். அவன் விடும் அம்பு ஒன்றேகால் மைல் தூரம் செல்லும் என்று சிஷ்யர் வியப்புடனும் பெருமையுடனும் சொல்லுகிறார்கள். குதிரைகளைப் பழக்குவதிலும் குதிரை மீது சலியாமல் சவாரி செய்வதிலும் அவனுக்கு இணை அவன்தான். அவன் முக்கியமாக வழிபட்ட உபாசனா மூர்த்தி சர்வலோக சரண்யையான சண்டி தேவியாவள். அவன் ஸம்ஸ்கிருத பாஷையிலும் பார்ஸீ பாஷையிலும் ஹிந்தியிலும் மகா பண்டிதனாகி ஹிந்தியில் மகா கவியாகவும் ஆகிவிட்டான். அவனது சண்டி ஸ்தோத்திரம் உயிரற்றவருக்கும் உயிர் கொடுக்கும் வன்மை வாய்ந்தது. தனது ஆத்ம சரித்திரத்தைக் காவியமாகச் செய்து, அதற்கு 'விசித்திர நாடகம்' என்று பெயர் கொடுத்து, எழுத எழுத அதைப்படித்துத் தன் சிஷ்யர்களுக்கு வீராவேசத்தையும் தர்மாவேசத்தையும் அவன் கிளப்பி வந்தான். அவனுக்குத் தைரியம் கொடுக்க ஔரங்கஜேபை நூறு போர்களில் வென்று சத்திரபதி என்னும் மகுடம் சூடிய சிவாஜியின் உதாரணமும், சிவாஜி இறந்த பிறகும் மகாராஷ்டிரரின் தீரத்தைக் குன்றவிடாமல் பாதுகாத்த ராஜாராமன், தாராபாயி இவர்களுடைய உதாரணமும் விளங்கின. தவம் செய்யச் செய்ய, உபாசனை புரியப் புரிய, அவனுடைய தைரியமும் நம்பிக்கையும் வளர்ந்தன. "வில்லாளர்களுக்கெல்லாம் அர்ஜ்ஜுனன் எவ்வாறு முதல்வனாயினானோ அந்த இரகசியத்தை எனக்குக் கற்பிக்க வேண்டும், அன்னையே!" என்று மகா காளியை வேண்டி வேண்டியே அவனது வில் திறமும் போர்த் திறமும் வளர்ந்தன.

கற்கவேண்டிய வெல்லாம் கற்ற பிறகு, ஆற்ற வேண்டிய தவங்களை யெல்லாம் ஆற்றிய பிறகு, குரு கோவிந்தராயி தனது முப்பத்தைந்தாவது வயதில் மகா

காளியின் பிரசாதத்தைப் பெறுவதற்காக ஓர் மகா யாகம் செய்ய யத்தனித்தான். அந்த யாகம்தான் நாம் இச் சரித்திரத் தவக்கத்தில் வர்ணித்த யாகமாகும்.

யாக தினம் கடைசியில் விடிந்தது. வந்த ஜனங்களெல்லாம் யாககுண்டத்தைச் சுற்றிச் சூழ உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். பண்டிதர்கள் சர்வ சக்தியை நோக்கி ஆகுதி கொடுத்த வண்ணமாக இருக்கிறார்கள். குரு கோவிந்தன் யஜமான ஸ்தானத்தில் உட்கார்ந்து கொண்டு, சக்தியைத் தியானித்து, அவளுடைய அருளை வேண்டிய வண்ணமாக இருக்கிறான். பார்ப்போர் கண்ணுக்கு அவனே சக்தி மயமாக விளங்குகிறான். ஆகுதி ஏற ஏற, அர்த்த புஷ்டியான மந்திரங்களின் உச்சாரணம் கோஷிக்கக் கோஷிக்க, கோவிந்தன் சமாதியை அடைந்து விட்டான். எல்லோரும் இமை கொட்டாமல் பார்த்துக்கொண் டிருக்கிறார்கள். கடைசியில் குருவானவன் சமாதியினின்று விழித்து "மகா சக்தியின் அருள் கிடைத்துவிட்டது! இவ் வாளில் 'சான்னித்தியமாக நிற்கிறேன்' என்று அன்னை எனக்கு வாக்குக் கொடுத்துவிட்டாள்! சிஷ்யர்களே, இனிப் பயத்தை விடுங்கள்! அதர்மம் உடைகிறது! தர்மம் தலை தூக்கி விட்டது! உங்களுடைய தியாகம் தான் பாக்கி, என்னுடைய தியாகம்தான் குறை. இவைகளை நாம் நிரப்பினதும் காளி நமக்கு வெற்றியைத் தந்திடுவாள்! பாரத நாட்டைக் காத்திடுவாள்! தர்மத்தை இப்புண்ணிய பூமியில் மறுபடியும் நிலைநாட்டி விடுவாள்!" என்று கம்பீரமான ஸ்வரத்தில் பேசினான்.

ஜனங்களது அச்சமும் ஐயமும் பறந்தோடிப் போயின. அவர்களுக்குத் தைரியமும் நம்பிக்கையும் ஒருங்கே பிறந்தன. ஆனந்தக் கூத்தாடினார்கள். பரவசமானார்கள். 'ஸத் ஸ்ரீ அகால்!' என்று சிங்கநாதம் செய்தார்கள்.

குரு கோவிந்தன் ஜனங்களது உற்சாகத்தைக் கண்டு உள்ளம் பூரித்தான். ஆனால் 'இவர்களுள் எத்தனை பேர் கடைசி வரையில் தியாக மூர்த்திகளாக இருந்து, சலக்கம் வந்த காலத்தும் தோல்வி வந்த காலத்தும் தாங்கி நின்று, வெற்றியைக் காணுமளவும் பின் வாங்காமற் போர் புரிவார்கள்' என்ற ஐயம் அவன் களிப்பைச் சற்றுக் குறைத்தது. ஆகையால் அவர்களுடைய தகுதியை அடுத்த நாள் சோதித்த பிறகுதான் அவர்களது தைரியத்திலும் உற்சாகத்திலும் தான் பூரண நம்பிக்கை வைக்க முடியுமென்று சொல்லி, அவர்களைத் தன் கூடாரத்தினருகே அடுத்தநாள் வந்து கூடுமாறு ஆக்ஞாபித்து விட்டு, எல்லோரையும் விடை கொடுத்தனுப்பி விட்டான்.

இரத்த பலி

அடுத்த நாள் மறுபடியும் ஜனங்கள் கூடினார்கள். ஆனால் இப்பொழுது உற்சாகத்தின் கிளர்ச்சியில்லை. எல்லோரும் குரு மஹாராஜன் என்ன சோதனை செய்யப் போகிறானோ, அந்தச் சோதனையில் தாம் தேறுவோமோ என்ற பயமும் ஐயமும் நிரம்பியவர்களாக உட்கார்ந்துகொண் டிருக்கிறார்கள். எல்லோரும் வெகு நேரம் காத்திருக்கவில்லை. கோவிந்த குரு உயிர் பெற்று இலங்கும் அக்னி ஜ்வாலையைப் போல நடந்து வந்து பீடத்தில் உட்கார்ந்து, பாரத நாட்டின் நிலைமையைப் பற்றி உருக்கமாக, ஆவேசத்தோடு, உபன்னியாசம் செய்தான். மொகலாயரின் ஆளுகையின்கீழ் ஏழைகள் படுகிற பாட்டையும் நாட்டின் தர்மம் வீழ்ந்திருக்கிற வீழ்ச்சியையும், நாட்டு ஜனங்களின் சிறுமையையும் வர்ணிக்க வர்ணிக்க, ஜனங்கள் தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்து விட்டார்கள். கடைசியில் எழுந்திருந்து நின்றுகொண்டு, "சிஷ்யர்களே! இந்த நிலைமையை மாற்றவேண்டும்! உங்கள் குரு மகாராஜாவான பாகவதோத்தமனை தேக பஹிஷ்காரச் சிரச்சேதம் செய்யத் துணிந்த அரசாங்கத்தை வேரறுத்துவிட வேண்டும்! மஹா காளி நமக்குச் 'சக்தியும் பலமும் தருகிறேன்' என்று வாக்களித்துவிட்டாள்; ஆனால் அவளுடைய அருளுக்கு நாம் பாத்திரமாக வேண்டுமானால், நம்முள் பலர் தங்கள் உயிரைத் தியாகம் செய்துவிட ஆயத்தமாக இருத்தல் வேண்டும். சண்டிதேவி இரத்த பலி கேட்கிறாள். உங்களுள் யார் பலியாக முன் வருகிறீர்கள்?" என்று குருகோவிந்தன் ஆவேசத்தோடு கேட்கிறான். யாரும் வாய் திறக்கவில்லை. எல்லோரும் தரையைப் பார்த்துக் கொண்டும், ஒருவன் முகத்தை ஒருவன் பார்த்துக்கொண்டும் பேச நா எழாமல் மௌனம் சாதிக்கிறார்கள். துஷ்ட சம்ஹாரம் செய்ய எழுந்திருக்கிற கல்கியைப்போலச் செவந்த கண்களுடனே குரு கோவிந்தன் "இத்தனை ஆயிரம் ஜனங்களுக்குள்ளே, பாரத நாட்டுக்குச் சற்று முன்னேதான் பரிந்துகொண்டழுத இந்த அன்பர் கூட்டத்தினுள்ளே, பாரத பூமியின்மீது சண்டி தேவியின் அருள் பிறப்பதற்காகத் தன் உயிரைப் பலி கொடுக்கும் புண்ய சீலன் ஒருவன்கூட இல்லையா?" என்று துயரத்துடன் கேட்டான். அப்பொழுதும் நிச்சப்தம். ஓர் ஊசி தரையில் விழுந்தாற்கூட அவ் ஓசை வெகு தூரம் கேட்டிருக்கும். சிஷ்யர் கூட்டத்தில் ஒருவரேனும் எழுந்திருக்கவில்லை—குருவின் புறம் கண்களைக்கூடத் திருப்பிப் பார்க்கவில்லை. "சரி, நம்மால் ஒன்றும் சாத்தியமில்லை. ஹிந்து ஜாதி கரையேறுவதற்காகத் தன் உயிரைப் பலிதானமாகக் கொடுக்கக் கூடிய மகாப் பிரபு இந்நாளில்—இக் கூட்டத்தில்—ஒருவனேனும் இல்லையென்று மகா சக்தியினிடம் விண்ணப்பித்துவிட்டு, நானே பலியாகிறேன்! ஏ பாரத பூமியே! ஏ சிஷ்ய ஜனங்களே! ஏ ஹிந்து ஜாதியே! உங்கள் இதயத்துக்குள் சௌரியத்தை உண்டாக்கத் தகுந்த ஆற்றல் படைத்த குரு இனியேனும் உங்களுக்குள் தோன்றட்டும்! நான் உங்களிடம் விடை பெற்றுக் கொள்கிறேன்!" என்று சொல்லிக்கொண்டு, கோவிந்தன் மேடையினின்று இறங்கக் காலடி எடுத்து வைத்தான். அச்சமயத்தில் கந்தை உடுத்திக்கொண்டிருந்த ஒருவன் எழுந்திருந்து முன் வந்து, "சுவாமி! மகாப் பிரபு! தேவரீர் செல்ல வேண்டாம். அடியேன் ஓர் ஏழைக் கத்திரி.* என் பெயர் தயாலால். என் தேகம் சண்டி தேவிக்கு உகக்குமானால், அதை இப்பொழுதே பலியாகக் கொடுக்க நான் ஆயத்தமாக இருக்கிறேன்" என்று கூறிக் கைகூப்பிக்கொண்டு நின்றான்.

[கதையின் தொடர்ச்சியை அடுத்த இதழில் பார்க்கவும்.]

* க்ஷத்திரியர்கள் கீழாகப் பாவிக்கிற ஓர் ஜாதி.



முண்டாசுகள்—(திப்பு)

பிறவியிலிருந்தே சிலர் பெரியவர்களா யிருக்கின்றனர். முயற்சியினால் சிலர் பெரியவர்களாகின்றனர். சிலர் தலைகளின்மீது பெருமையைப் பிறர் சுமத்தி விடுவதால் பெரியவர்களாக வேண்டி யிருக்கிறது. ஆனால் பெரிய முண்டாசு கட்டிக்கொண்டு முன்னுக்கு வந்து பெரியவர்களாகி விடுகின்றார்களே, அவர்களை எந்த கோஷ்டியில் சேர்ப்பதென்பது தெரியவில்லை.

அழகான பெண் பிள்ளையின் படம் ஒன்றை வரைந்து அந்த உருவத்தின் தலையில் சித்திரக்காரன் கிரீடம் என்ற ஒரு சாமானை ஏற்றிவிட்டானானால், உடனே அந்தப் படம் ஏதோ ஒரு தெய்வத்தின் படம் என்று கொண்டாடப்பட்டு வருகின்றது என்று தோன்றுகிறது. குடிக்காரக் குப்பன் தலையில் மரக் கிரீடத்தையும் வாகு வலயங்களையும் அணிந்து பாடத்தொடங்கியவுடன் அரிச்சந்திரனாகவோ, எமதர்மனாகவோ சில நேரம் எண்ணப் படுகின்றான். ஆகவே, தலை அணிக்கு ஏதோ ஓர் தெய்வசக்தி இருக்கிறதென்பதை அதிகம் விவரிக்க வேண்டாம். முண்டாசு கட்டிக் கொண்டதால்தான் நொண்டி வீரப்பனையும் ஓர் தெய்வமாக்கி விட்டார்கள் போலும்.

"அரசு போனாலும் போகட்டும். சண்டை தோற்றாலும் தோற்கட்டும். வம்சத்துப் பெரியார்கள் உட்கார்ந்த அந்த நாற்காலியையும், தலைக் கிரீடத்தையும் மற்றும் எங்கேயாவது புதைத்து வைத்திருந்தால் ராஜவம்சம் அழியவே அழியாது" என்று தோற்றோடும் அரசர்கள் சொல்லி வந்தார்களாம். ஆகவே, இந்தத் தலையணி தெய்வீகம் மட்டுமல்ல, ராஜ்ய மில்லாதவருக்கும் 'ராஜா' என்ற பட்டத்தைத் தந்துவிடுகிறது.

தலைப்பாகை அணிவதனால் எவ்வளவோ சவுகர்யங்களுண்டு. நரை மயிரை மூடி அழகான இளைஞனாக அது மாற்றிவிடும். அந்தத் தலைப்பாகை எவ்வளவுக் கெவ்வளவு பெரிதா யிருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு உள்ளே மூளையிருக்கக் கூடுமென இளஞ் சிறுவர் நினைத்து மரியாதை தருவார்கள். காயத்துக்குக கட்டுக் கட்டிக் கொள்வது போல சின்ன 'டர்பன்' கட்டிக் கொள்வதைவிட, பெரிய பஞ்சாப் முண்டாசு கட்டிக்கொள்வது மகா கெடுபிடியாய்த் தோன்றும்.

உலக சரித்திரத்தில் ஒரே ஒரு தலைப்பாகைதான் அபாரவேலை செய்துவிட்டது. அதுதான் 'நாதிர்ஷா' என்ற ஆப்கானிய வீரன் அணிந்திருந்த தலைப்பாகை. டெல்லியை நாதிர்ஷா படையெடுத்துச் சூறையாடி, டெல்லி பாதுஷாவோடு சமாதானம் பேசினாராம். இருவரும் நண்பர்களாகப் பிரிய விருந்த தருணத்தில், "நல்ல நண்பர்கள் பிரியும்போது தலைப் பாகைகளை மாற்றிக்கொள்வது வழக்கம்" என்று நாதிர்ஷா தமது தலைப்பாகையை எடுத்தார். டெல்லி பாதுஷாவும் தமது தலைப்பாகையை மாற்றித் தரவேண்டியதாயிற்று. டெல்லி பாதுஷாவின் தலைப்பாகையைத் தன் தலையில் மாட்டிக்கொண்டு நாதிர்ஷா நடந்து விட்டார். அந்தத் தலைப் பாகையில் டெல்லி பாதுஷாவின் கோஹினூர் வைரம் செருகப்பட்டிருந்தது. நாதிர்ஷாவுக்குப் பரம லாபம் ஆயிற்று. கோஹினூர் வைரத்துக்கு இவ்வளவுதான் விலை என்று இன்னும் மதிப்பு போடப்பட வில்லையல்லவா? இப்படியாக நாதிர்ஷாவின் தலைப்பாகை சரித்திரத்திலேயே ஓர் இடம் பெற்று விட்டது. இந்த மாதிரி ஓர் தலைப்பாகை லாபம் சம்பாதித்துத் தருவதானால் நாலைந்து தலைப்பாகைகளை வேண்டுமானாலும் 'அணிந்துகொண்டு அலைவதற்கு அநேகம் பெயர்கள் தயார். ஆனால் லாபம் கிடைப்பதில்லையே, என் செய்வது?

இந்தியா என்ற நினைப்பு வந்தால் உடனே தலை டர்பனைத்தான் எண்ணுவர் மேனாட்டினர். அத்தகைய தேசீய அடையாளமாக, தலைப்பாகை நினைக்கப்பட்டு வருகிறது. அது ஓரளவு உண்மைதான். நமது பண்ணையில் வேலை செய்யும் வீரையன் கௌபீனதாரியாக இருந்த போதிலும், எஜமான் கொடுத்த எட்டு முழத்தையும் தலையிலே அல்லவோ முண்டாசு கட்டிக் கொள்கின்றான். வெற்றிலை, பாக்கு, சுருட்டு, காசு முதலியவை வைத்துக்கொள்ள நல்ல பொக்கிஷமாக அவன் முண்டாசு இருக்கின்றது. இப்பேர்ப்பட்ட உபயோகமுள்ள முண்டாசு தேசீய அடையாள மாகா திருக்குமா?

ஸ்வதேசியை ஆதரியுங்கள்

கள்ளிக்கோட்டை விஜிடபில் சோப் ஒர்க்ஸில்

தயார் செய்த மேன்மையான வாசனையுள்ள

மலபார் { லிலி ரோஸ் சோப், சந்தன சோப், லிம்டா சோப் (நீம்-வேப்), டர்கிஷ் பாத் சோப்

இந்த டாய்லட் சோப்புகள் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டியதவசியம். ஆரோக்கியத்திற்கும் திரேக சவுக்கியத்திற்கும் இவையே முதன்மையானவை.

எமது முக்கியமான சலவை சோப்புகள் :—

மலபார் சோப் & நீலம் (இண்டிகோ) சோப்

நெ. 101. குஜராத் சோப்

எல்லா விடங்களிலும் கிடைக்கும்.

Props: சேட் நாக்ஜீ புருஷோத்தம் & கோ.

(OF SUN BRAND UMBRELLA FAME)

247, சைனாபஜார் ரோட், மதராஸ். (H. O, கள்ளிக்கோட்டை)

முண்டாசினுல் உள்ள இன்னொரு உபயோகத்தையும் பலர் கவனித்திருக்கக்கூடும். நான் ஸினிமாவில் வள்ளி கல்யாணம் பார்க்கப் போயிருந்தேன். வேடர்கள், சேவகர்கள், மந்திரிகள், பிராம்மணர்கள் அனைவரும் முண்டாசுகளோடே வந்து ஆக்ட் செய்தது ஆச்சரியமாயிருந்தது. கொஞ்சம் அசிரத்தையினுல் ஒருவன் முண்டாசு அவிழ்ந்து விட்டது. அப்போதுதான் அவன் தலை கிராப்புத்தலை என்பது தெரிந்தது. நவீன காலத்துக் கிராப்புத்தலையை மூடிப் பலவருஷங்களுக்கு முன்னேயுள்ள ஆளாக ஆக்கிவிடும் சக்தி முண்டாசுக்கு உண்டு என்பது அப்போது தெரிந்தது. கால கதியையும் விஞ்சியது முண்டாசு!

மனிதன் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு முண்டாசுகள் மாறுகின்றன. காலையில் குளத்தங் கரைக்குப்போகும் போது ஒரு முண்டாசு, ஆபீசுக்குப் போகும்போது தலைப்பாகை, மாலையில் 'வாக்கிங்' போகிறபோது கிர்க்கட்டு இப்படியாக மாறு வேஷங்கள் போடவும் மனே நிலையைக் காட்டவும் முண்டாசுகள் உபயோகப் படுகின்றன. அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம், கடுத்தது காட்டும் முண்டாசு!

தொழிலுக்குத் தக்கவாறு முண்டாசுகள் கொடுக்கப்பட் டிருக்கின்றன. நம்மூர் ஸப் இன்ஸ்பெக்டர் முண்டாசு ஓர் விதம். தலையெழுத்து இல்லாமலே அவரது உத்தியோகம் தெரியவரும். அதைவிட அழகாக சாதாரண போலீஸ்காரரின் தலையணி இருக்கின்றது. ஸ்டேஷன் மாஸ்டரை அவரது தலைப்பாகையினின்றே கண்டு கொள்ளலாம். ஜெயிலில் 'காணிக் வார்டர்கள்' என்று ஒரு கோஷ்டி உண்டு. அவர்களையும் முண்டாசுகளினின்று அறிந்து கொள்ளலாம். நெட்டியாலோ, காகிதத்தாலோ தயார் செய்யப்பட்ட முண்டாசுகள் துணிக் கட்டைவிட மிக்க சவுகர்யமானவை. முண்டாசு உத்யோகம் உடையவர்கள் பல வருஷங்களின், அழுக்குச் சேர்வதைப் பற்றிக் கவலைப்பட லாகாது. அவர்கள் அவ் விஷயத்தில் பற்றுதலற்று வாழ வேண்டும்.

நம் தேசத்தில் ஊருக்கு ஊர் ஓர் வகை முண்டாசு வழக்கத்திலிருக்கிறது. மகாராஜாக்கள் பலர் டெல்லி தர்பாரில் நிற்பதுபோல ஒரு பழைய படம் சிலர் வீட்டுச் சுவர்களில் தொங்க விட்டிருக்கும். அந்தப் படத்தைப் பார்த்தால் துணியோ, நெட்டியோ என்ன பாடு படுகிறதென்பது தெரியவரும். ஆமைபோல ஒரு முண்டாசு, பரங்கிக்காய் போல இன்னொன்று, கும்பாச்சியாக வேறொன்று, இப்படிப் பல ரகங்களிலும் அவை உள. சில முண்டாசுகளின் ரூபங்கள்மட்டும்நமது கண்ணைவிட்டு அகலுவதில்லை. சரித்திரத்தில் சிவாஜியின் தலையணியை நம்மால் மறக்கமுடியுமா? அதே மாதிரி பால கங்காதர திலகரின் மராட்டியத் தலைப்பாகையும் நமது கண் முன்னே தோன்றுகிறது. பச்சையப்ப முதலியாரின் படகு போன்ற பாகையையும் நாம் மறப்பதற்கில்லை. அதேமாதிரி மகாத்மா காந்தியும் ஒரு காலத்தில் குஜராத்தி டர்பன் கட்டிக் கொண்டிருந்தவர் தான். இப்போது அவர் அவ்வழக்கத்தை விட்டுவிட்டாராலும் அந்தத் தலைப்பாகையையும் நாம் மறப்பதற்கில்லை. சென்னை மாகாணத்தின் பத்திரிகைப் படங்களில் சிலர் அடிக்கடி தென்பட்டுக் கொண்டிருக்கிருர்கள் என்ரே! அவர்களின் தலைப்பாகைகளும் நம் கண்முன் நிற்பது சகஜம். வலங்கிமான் சீனிவாஸ சாஸ்திரியாரின் பாகை ஓர் விதம். கிருஷ்ணராவ் பான்ஸ்லே என்பாரின் தலைப்பாகை இன்னொரு விதம். காலஞ் சென்ற பனகால் ராஜாவின் தலைப்பாகையை இன்னும் ஒருவரும் இமிடேஷன் செய்யவில்லை யல்லவா? ஆகவே தலையில் ஒரு புது முண்டாசு கட்டிக்கொண்டால், தலைவராய் விடலாம் போலிருக்கிறதே. நிற்க,

போலீஸ் இலாக்காக்காரர், ரயில்வே உத்தியோகஸ்தர், பண்ணையாள் முதலியவர்கள் கட்டிக் கொள்வதுபோல அவரவர் தொழிலுக்கு ஏற்றவாறு இனி முண்டாசுகளும் தலையணிகளும் அணிந்துகொள்ள வேண்டுமென்று தோன்றுகிறது. அப்போதுதான் 'டக்'கென்று ஆளைத் தெரிந்துகொள்ளலாம். பத்திரிகை ஆசிரியர்கள் பேனு இரகுகளை முண்டாசுகளில் செருகிக் கொள்ளட்டுமே! வியாபாரிகள் 'அரைப்படி' போன்ற தலைப்பாகையை அணியலாமல்லவா? உபாத்தியாயர்களை இப்போதுள்ள முண்டாசுகளினின்றே அறிந்து கொள்ளலாம். ஹோட்டல்காரர்கள் நாலைந்து கரண்டிகளையும் ஸ்பூன்களையும் சொருகிக் கொண்டு அலையலாம். இதே மாதிரி வக்கீல்கள், டாக்டர்கள் எல்லோருக்கும் ஒரோர் வகை முண்டாசுகள் தயாரிக்க வேண்டும். பெண்மணிகளும் முண்டாசுகள் கட்டிக்கொள்ள உரிமையுண்டா இல்லையா வென்று வாதித்து அடுத்த ஸ்திரீகள் மகா நாட்டிலே தீர்மானம் நிறைவேற்றுவார்களானுல், அவர்களால் சில கஜங்கள் அந்நியத் துணி செலவாகுமா ஆகாதா என்பதைக் கண்டுபிடித்து விடலாமன்ரே!

உலகப் பிரசித்திப் பெற்ற

ஆ. அப்பாதுரை முதலியார் அண்டு சன்,

பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம்,

முதலிய வாடை கமழுகின்றது.

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் குணம் தங்களுக்கே தெரியவரும்.

ஆ. அப்பாதுரை முதலியார்

அண்டு ஸன்,

புகையிலைக் கமிஷன் ஏஜண்டுகள், அண்டு மூக்குத்தூள் வியாபாரிகள்.

39, பாரிஷ் வெங்கடாசல ஐயர் தெரு,
தபால் பெட்டி நெ. 189. சென்னை.

தொழிற்சாலை: நெ. 55, ஆச்சாரப்பன் வீதி.

மகாத்மா காந்தி எழுதிய

நூல்கள்

	ரூ.	அ.	பை.
இல்லறமும் பிரும்மசரியமும்	0	6	0
மகா தியாகம்	0	4	0
அனுசக்தி யோகம்	0	4	0
ஹிந்து தர்மம்	0	2	0
கீதா போதனை	0	2	0
உத்தம வாழ்க்கை	0	2	0
ஆரோக்கிய வழி	0	4	0

சுதந்திரச்சங்கு புத்தகசாலை

பைக்கிராப்ட்ஸ் ரோட்,

திருவல்லிக்கேணி, சென்னை.

சனாதனிகளுக்கு அழைப்பு

(மகாத்மாஜீயின் பிரசங்கம்.)

[குருவாயூர்ப் பொதுக் கூட்டத்துக்கு மகாத்மாஜீ விஜயம் செய்தபொழுது, இரு சனாதனிகள் அடிபட்டுக் கிடந்ததைக் கண்டார். சனாதனிகள் கூட்டத்தைத் தங்கள் கைவசப்படுத்த முயற்சித்ததால் ஏற்பட்ட கலவரத்தின் விளைவு இது. மகாத்மாஜீ அடிப்பட்டவர்களை உடனே ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டு, பின்வரும் உருக்கமான பிரசங்கத்தைச் செய்தார்.]



இந்தக் கூட்டத்திற்கு வர சனாதனிகளுக்கும், உங்களைப்போலவே, பூரண உரிமை உண்டு; அமைதியான முறையில் தங்கள் கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்ள உரிமை உண்டு. இந்த இரண்டு மனிதர்களும் அடிப்பட்டதற்கு நான் ஆழ்ந்த வருத்தமடைகிறேன். இந்தக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்த யாரேனும் இதில் சம்பந்தப்பட்டிருந்தால், அவர்களுக்கே இது அவமானமாகும். ஹரிஜன இயக்கத்துக்கும் ஹிந்து மதத்திற்குமே அவர்கள் தீங்கு தேடி விட்டார்களென்று நான் சொல்லுவேன்.

ஒழுக்க சீலர்களே இவ்வியக்கத்தை நடத்த முடியும். ஆத்திர வார்த்தைகளுக்கோ, பதற்றமான செயல்களுக்கோ இதில் இடம் கிடையாது. தேக ஹிம்சை யென்பது கூடவே கூடாது. இந்த அடிபட்ட சகோதரர் நமது நாட்டையே சேர்ந்தவர். நமது உற்றார் உறவினரின் உயிர் எவ்வளவு அருமையா யிருக்குமோ அவ்வளவு அருமையாகவே இவர்கள் உயிரையும் நீங்களும் நானும் மதிக்கவேண்டும். இவர்களுக்குத் தீங்குசெய்யக் காரணமாயிருந்தவர் யாரேனும் இங்கிருந்தால், பகிரங்கமாக அவர் தமது மன்னிப்பைத் தெரிவித்துக்கொள்ள வேண்டும்; இனி யொருபொழுதும் இப்படிச் செய்வதில்லையென்று விரதமும் கொள்ள வேண்டும்.

எதிர்ப் பிரசாரம் செய்பவர்களுக்கும் ஒரு வேண்டுகோள். இந்தமாதிரி கண்டன ஆர்ப்பாட்டங்களால் சனாதன தர்மத்தை அவர்கள் காப்பாற்ற முடியாது. அவர்கள் என்னை நேரில் சந்தித்துப் பேசட்டும். என்னதான் வேண்டுமென்கிறார்கள்? அதை நேரே சொல்ல லாகாதா? இந்தச் சுற்றுப் பிரயாணத்தை மாத்திரம் நிறுத்த முடியாது. இதைத் தவிர, அவர்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வேறு என்ன வசதி வேண்டுமாயினும் நான் அவர்களுக்குச் செய்துதரத் தயாராயிருக்கிறேன். பொதுக் கூட்டங்களில் நான் எப்படி எனது அபிப்பிராயங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறேனோ, அதேமாதிரி அவர்களும் தங்கள் அபிப்பிராயங்களைச் சொல்லட்டுமே.

சனாதனதர்மம் என்பதுதான் என்ன? ஒரு கோஷ்டியாருக்கே ஏக போக உரிமையான உடைமையா? அல்லவே. நானும் சனாதனதர்மிதான். தீண்டாமை வழக்கத்தை நான் தீவிரமாய் எதிர்ப்பதற்கு, சாஸ்திரங்களையே ஆதாரமாய்க் கொண் டிருக்கிறேன். எனது 50 வருஷ அனுபவத்திலிருந்து திட நிச்சயத்துடன் நான் சொல்லுகிறேன்; ஹிந்து சாஸ்திரங்களில் தீண்டாமைக்கு ஆதாரமே கிடையாது. குருவாயூரிலும் பிற ஊர்களிலும் ஹரிஜனங்களுக்கு ஆலயங்களைத் திறந்து விட வேண்டும். அதுவரையில் ஜாதி ஹிந்துக்கள் தங்கள் கடமையைச் சரிவரச் செய்தவ ராகார்.

ஆனால், இன்று காலை சிலர் காதோடு பேசிக்கொண்ட ஒரு வதந்தியைக்கேட்டேன். இந்த ஆலயப்பிரவேச இயக்கத்துக்குள் இரகசிய நோக்கம் ஏதோ இருக்கிறதாம். நான் இல்லாவிட்டாலும் என் சகாக்கள் இக் கோயில்களைக் கைப்பற்றிக்கொள்ள எண்ணியிருக்கிறார்களாம். இந்த வதந்தியெல்லாம் அடியோடு பொய் என்று நான் மறுக்கிறேன். இக் கோயிலெல்லாம் இன்று சட்டப்படி யார்வசமிருக்கிறதோ அவர் வசமேதான் பின்னும் இருந்துவரும்.

பிராம்மண தர்மத்தை அமுக்கிவிட ஒரு சூழ்ச்சி என்று வேறு சொல்லிக் கொண்டிருக்கிறார் சிலர். பிராம்மண தர்மத்தை வீழ்த்துவதென்றால், ஹிந்து மதத்தையே வீழ்த்துவ தென்றுதான் அர்த்தம். அத்தகைய குற்றத்தை நான் செய்யேன். இதற்காக, இக்காலத்தில் பிராம்மணர் கொண்டாடும் பாத்தியங்களை யெல்லாம் ஏற்றுக் கொள்ளுகிறேன் என்று அர்த்தமில்லை. பிரம்மத்தை யறிந்தவனாய்த் தனது சகல நடவடிக்கைகளிலும் நடந்து கொள்ளுபவனே பிராம்மணன். ஒவ்வொரு நாட் காலையும் படுக்கைவிட் டெழுந்ததும் அத்தகைய பிராம்மணனுக்கு நான் பதினாயிரம் நமஸ்காரம் செய்வேன். ஆனால், சுயநலமே குறியாய், ஒவ்வொரு நாளும் பல்லாயிரம் பழிகள் செய்து, பிறரை மறந்து, சதாத் தன்னைப் பற்றியே நினைந்து கொண்டிருக்கும் பிராம்மணனை நான் வணங்கேன். உண்மையான பிராம்மணன் வேதத்தைத் தன் வாழ்க்கையிலே அனுஷ்டித்துக் காட்ட வேண்டும். பிறர் வாழத் தன்னுயிரையே வேண்டுமாயினும் தியாகம் செய்ய, அவன் அனவரதமும் சித்தமா யிருக்க வேண்டும்.

நான் வேத, சாஸ்திரங்களை நிறையக் கற்றவனல்ல. அப்படிக் கற்றால்தான் கடவுளை அறியமுடியுமென்று வேதங்கள் சொல்லவில்லை. ஆண்டவனை அறிய இதய பரிசுத்தம் வேண்டும். நமக்கு நல்ல வழியைக் காட்டுமாறும், இத்தீண்டாமைத் தீமையை நம் இதயத்திலிருந்து களையுமாறும் ஆண்டவனை நான் பிரார்த்திக்கிறேன். எனது பிரார்த்தனையில் நீங்களும் கலந்து கொள்ள வேண்டுகிறேன்.

மகாத்மாவின்

தமிழ்நாட்டு விஜயம்

1934ஆம் ஜனவரிமீ 24உ முதல் ஆரம்பம்.

எல்லா விடங்களிலும் ஜனங்கள் நிசப்தமா யிருந்தாலன்றி மகாத்மாவின் பேச்சைக் கேட்க முடியாது.

யாத்ரா மார்க்கம்

"மனத்தைச் சுற்றும் முகம்"

பாலக்காட்டில் நடந்த பொதுக் கூட்டத்தில் பேசுகையில், ஒரு நாயாடியைப் பற்றி மகாத்மா மிக உருக்கமாகப் பிரஸ்தாபித்தார்:—"காலை 10 அல்லது—11 மணியிருக்கும். காலில் ஒன்றுமில்லை. வயலில் விழுந்தடித்து அவன் நடந்து கொண்டிருந்தான். எவ்வளவோ நய வார்த்தை சொல்லி, என்னருகே வருமாறு அந்த நாயாடியைக் கூப்பிட்டேன். அவன் பயந்து விட்டான். நடுநடுங்கிக் கொண்டே அவன் பேசினான். பொது ரஸ்தா அவனுக்குச் சொந்தமில்லையாம். அதில் தான் நடக்கக் கூடாதென்கிறான்! இந்தக் குரூரத்திற்குச் சாஸ்திர ஆதாரம் காட்டமுடியுமா என்று சனாதனிகளை நான் கேட்கிறேன். உங்களோடு நகைத்துக் கொண்டிருப்பேன்; தமாஷ் செய்து கொண் டிருப்பேன். ஆனால், இதெல்லாம் மேலுக்குத்தான். எனது மலையாளச் சுற்றுப் பிரயாணம் பூராவும், அந்த நாயாடியின் முகம் என் மனத்தைச் சுற்றிக்கொண்டே தான் இருக்கும்."

"குழந்தைகளைப் போல்"

மலையாள ஸ்திரீகளை, அவர்களது உடையின் பரிசுத்த வெண்மைக்காகப் புகழ்ந்துவிட்டு, மேலே ஐயன் கூறியதாவது:—"ஹிந்து மதத்துக்குத் தலைமேலே ஆபத்து வந்திருக்கிறது. அதனின்றும் அதைக் காப்பாற்றுங்கள். உங்கள் சோம்பலை விட்டொழியுங்கள். அசிரத்தை வேண்டாம். உங்கள் குழந்தைகளை எவ்வளவு கண்ணுங் கருத்துமாய்ப் பாதுகாப்பீர்களோ, அப்படியே மத விஷயத்திலும் விழிப்புடனிருங்கள். குழந்தையினிடம் வாத்ஸல்யமாய் நடக்கிறீர்கள். உங்கள் சமயத்தினிடம் ஏன் அப்படி நடக்கவில்லை? உயர்வு தாழ்வு வேற்றுமைகளை ஒழித்துவிட முயற்சி செய்வீர்களா? தீண்டாமை தலைவிரித்தாடுவதற்கு அகங்காரமே காரணம். இந்த அகங்காரத்தால், மதக் கிரந்தங்களுக் கெல்லாம் விபரீத அர்த்தங்கள் கிளம்பி விடுகின்றன."

உண்மையான ஆபரணம்

கோமதி என்ற ஒரு 20 வயதுப் பெண், படகாராவில் செய்த தியாகம் மகாத்மாவின் மனத்தை உருக்கிவிட்டது. நகைகளைத் தருமாறு மகாத்மா கூட்டத்தி லிருந்த பெண்மணிகளை வேண்டினார். இந்த இளம் பெண் உடனே தனது இருகைக் காப்புக்களையும் ஐயனிடம் கழற்றிக் கொடுத்தாள். இவ்வளவோடு நிற்பாள் என்று காந்திஜீ நினைத்ததற்கு மாறாக, "காதில் என்னவோ இருக்கிறதே" என்று, தோட்டையும் களைந்து சமர்ப்பித்து விட்டாள். இனித் தன் தந்தையை நகையே கேட்பதில்லையென்றும் வாக்குக் கொடுத்துவிட்டாள். இத்தனைக்கும் பிறகு, காந்திஜீயை ஒரு கையெழுத்து மாத்திரம் போட்டுத் தருமாறு கேட்டாள். "உனது பெரிய தியாகமே, நீ கொடுத்த தங்க வைர ஆபரணங்களினும் உயரிய உண்மை ஆபரணமாகும்" என்று காந்திஜீ ஹிந்தியில் எழுதி, தமது கை யெழுத்தையும் போட்டுத் தந்தார். அவளுக்குப் பரம சந்தோஷம்.

"ஒரே கடவுள்தான்."

கள்ளிக்கோட்டைக் கிருஸ்தவக் கல்லூரி மாணவர்களுக்குப் பதில் கூறுகையில் மகாத்மா சொன்னதாவது:—"நாம் எந்த மதத்தைச் சேர்ந்தவராயினும் சரி, நாம் யாவரும் ஒரே சிருஷ்டி கர்த்தாவின் குழந்தைகளே யாவோம். ஒரே ஒரு கடவுள்தான். இதை உதட்டால் மாத்திரம் நாம் உச்சரிக்கிறோம். ஆனால், நமது ஒவ்வொரு காரியத்திலும் இதற்கு நேர்மாறாக நடக்கிறோம். இந்தப் பொய்யை நம் வாழ்க்கையினின்றும் களைந்தெறியவேண்டும். இதனைச் செய்ய மாணவரைவிட யாருக்கு அதிகத் தகுதியுண்டு? நாம் ஒரே கடவுளின் குழந்தைகளா யிருந்தால், நாம் யாவரும் ஒருவருக்கொருவர் சமமே. இந்த உண்மையைப் பகிரங்கமாய் அச்சமின்றி நீங்கள் பிரசாரம் செய்ய வேண்டும்."

"உன்னத சிருஷ்டியை."

15,000 ஜனங்களுக்கு முன் கள்ளிக்கோட்டைக் கடற்கரையில் மகாத்மாஜீ பேசும் பொழுது சொன்னதாவது:— "ஆண்டவன் படைப்புக்குள்ளேயே உன்னத சிருஷ்டி மனிதன்தான். அந்த உன்னத சிருஷ்டியையே நாம் உருக்குலைக்க முயன்றுவிட்டோம். எந்தப் பசுஞ்செடி தருவினும் உயர்ந்த வனப்பு வாய்ந்தது மனிதனுடைய ஆத்மா. அப்படியிருந்தும், ஹிந்து மனித ஜாதியில் ஒரு பகுதியை, உயர்ந்த ஜாதி ஹிந்துக்கள் அமுக்கிவிட்டனர்; தீண்டாதவர், அணுகாதவர், பாராதவர் என, தெய்வத்தின் பெயரால், பலரை ஒதுக்கித் தள்ளிவிட்டார்கள். இது அவர்களின் ஆத்மாவை அமுக்கி வீழ்த்தும் காரியமே யன்றோ? கல்பேட்டாவிலே, செடிகளும் தருக்களும் பரவசப்படுத்தும் எழிலுடன் இலங்கக் கண்டேன். ஆனால், அவற்றின் நடுவே துர்நாற்றம் வீசும் கோர மனித ரூபங்களைப் பார்த்தேன். அவர்கள் அப்படியிருப்பதற்கு நீங்களும் நானும்தான் காரணம். உங்களையும் என்னையும் போலவே கண்ணுக்குக் குளிர்ச்சியாய் அவர்களையும் தூய்மைப்படுத்த முடியும். கொஞ்சம் வென்னீர், ஒரு சோப்புக்கட்டி, சிறியதொரு கதர்த் துண்டு இவைதான் அதற்குத் தேவை. நம்மைப்போலவே அவர்களும் ரம்யமாய் ஆகிவிடுவார்கள். ஆனால், உள்ளம் சம்பந்தப்பட்டமட்டில், அவர்களா நாமா யார் உயர்ந்தவர் என்பதை ஆண்டவன்தான் தீர்மானிக்க முடியும்."

மிதக் குடியா, முழு விலக்கா?

மிதக்குடிச் சங்கத்தின் முன் காந்திஜீ பங்களூரில் பேசியதாவது:—"நான் மிதக்குடியை ஆதரிப்பவனல்ல. மதுவை அறவே ஒழிக்க வேண்டுமென்பதுதான் என் கட்சி. மதுபானத்திற்காக, வெள்ளையர்கள் தண்டிக்கப் படவில்லை யென்றால், நாமும் அதில் அவர்களுடன் சமத்துவ உரிமைக்குப் போராடலாகாது. உரிமைக்குப் பாடுபடுவதும், அனாவசிய போகத்திற்குப் போராடுவதும் வேறு வேறு விஷயங்கள். அநேக ஹரிஜனங்கள் என்னிடம் என்ன சொல்லியிருக்கிறார்கள், தெரியுமா? 'கள்ளை எங்கள் முன்னே வைக்காதீர்கள்' என்று சொன்னார்கள். அநேகத் தீய வழக்கங்களை நம்மால் விடமுடிகிறதோ? அவர்களால் மாத்திரம் எப்படி முடியும்? அவர்களுடன் நான் வாழ்ந்து, உண்டு, உடுத்திருக்கிறேன். உணவு ஆடைகளில் உண்டாகும் இச்சையைப் பூர்த்தி செய்து கொள்ளவும் அவர்களிடம் காசில்லை. தமாஷாக்கள் பார்க்க அவர்களுக்கு வசதியில்லை. ஆகையால்தான் அவர்கள் கள்ளுக்கடையை நண்ணுகிறார்கள். பூரண மதுவிலக்குச் சட்டம் அமுலுக்கு வரும் வரையில், இந்தத் தீமையை ஒழித்து நாம் வெற்றி காண முடியாது என்பதில் எனக்குத் துளிக் கூடச் சந்தேகம் கிடையாது."

புயல்கொண்ட கொள்ளை

அப்பொழுது தெரியவில்லை. சர்க்கார் அறிக்கை வெளிவந்த பிறகுதான், சில காலத்துக்கு முன் தமிழகத்தில் புயலும் மழையும் புரிந்த நாசத்தின் அளவு ஒருவாறு தெரிகின்றது.

மனித உயிர்ச்சேதம் :—சீயாழி 109; மாயவரம் 25 ; கடலூர் 5 ; அலீஸ் நகர் 1; சிதம்பரம் 5.

கால் நடைகள் உயிர்ச் சேதம் :—தென்னாற்காடு 104 ; சீயாழி 3,650 ; மாயவரம் 2,812; திருச்சி 134.

வீடுகள் சிதைவு மதிப்பு:—கடலூர்க் குடிசைகள் மட்டில் ரூபா 1,500 ; சிதம்பரம் அண்ணாமலை சர்வகலாசாலையில் 40 அல்லது 50,000 ரூபாய்; சிதம்பரத்தில் அநேகமாக எல்லா வீடுகளிலுமே ஓரளவு சேதம் உண்டு; சீயாழிக் குடிசைகள், ரூபாய் 95,800 ; சீயாழி உயர் வகுப்போர் வீடுகள், ரூ. 20,000; மாயவரம், ரூ. 4,124; திருச்சியில் 200 வீடுகள் சேதமாயின.

பயிர்ச்சேத மதிப்பு:—தென்னாற்காடு, லட்ச ரூபாய்க்குமேல்; தஞ்சை, 22 ஆயிர ரூபாய்க்கு மேல் ; திருச்சியிலும் 15 ஏகரை மண் மூடிவிட்டது, 18 ஏகரில் சேதமுமுண்டு.

சர்க்கார் அறிக்கையில் காணப்படும் விவரங்களை நாம் சுருக்கித்தான் தந்திருக்கிறோம். சர்க்காருக்கே இன்னும் பூரா விவரங்களும் கிடைக்கவில்லையென்று தெரிகிறது. ஆகையால், இந்த இயற்கையின் பயங்கர நாட்டியத்தால், ஜனங்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்று தெரியவில்லை. துரைத்தனம் ஏதோ ஓரளவு உதவி செய்யவும், கடன்கள் கொடுக்கவும் முன்வந்திருக்கிறது. 'தரகர்கள்' இதன் இடையில் புகாமல், பூரா உதவியும் துன்புறும் மக்களுக்குக் கிடைக்கும்படி செய்ய வேண்டும். மேலும், ஆங்காங்கு துன்புற்றோருக்குக் கஷ்ட நிவாரண உதவியைப் பிறரும் புரியவேண்டும்.

Rambles in Vedanta

BY

RAJAM IYER

Price Rs. 5 *Postage extra.*

Sangu Book Depot

Triplicane, Madras.

"நிலம் வேண்டாம்"

"விவசாய நாடு, விவசாய நாடு" என்று சர்க்கார் உள்பட எல்லாரும் பறையடிக்கிற இந்த நாட்டில் இப்பொழுது வியசாயத்துக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கடியை யாராலும் வர்ணிக்க முடியாது. பர்ஹாம்பூரிலிருந்து வரும் ஒரு செய்தியைப் படிக்கும் பொழுது, உருகாத மனம் கல் மனமாய்த்தானிருக்கவேண்டும். "போதுமான விளைச்சலில்லை. அபிவிருத்திக்கு அறிகுறியுமில்லை. ஆகையால், எங்கள் நிலம் எங்களுக்கு வேண்டாம்" என்று, கலெக்டருக்கு அங்குள்ள விவசாயிகள் மனுக்கொடுத்திருக்கிறார்களாம். "ஓதுவான் ஆளுவானெல்லாம் உழுவான் தலைக் கடையில்" என்று வேளாண்மைத் தொழிலாளரை மதித்து வந்து நாட்டிலே இப்பேர்ப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிற தென்றால், உள்ளூர ஏதோ ஓர் பெரும் நோய் அரித்துக் கொண்டிருக்கிறது என்றே தோன்றுகிறது. விவசாயிகளைக் கை தூக்கிவிட அரசாங்கம் உடனே வேண்டிய முயற்சிகளை எடுத்துக் கொள்ளாவிட்டால், என்ன நிகழ்ந்துவிடுமோ, யார் சொல்ல முடியும்?

தி யுனைடெட் இந்தியா

லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்.

தலைமை ஆபீஸ் மதராஸ். 1906ல் ஸ்தாபிக்கப்பட்டது.

டிரஸ்டி :—சென்னை அபிஷியல் டிரஸ்டி.

2 கோடி ரூபாய்களுக்கு அதிகமான பாலிஸிகள். 55 லக்ஷத்திற்கும் அதிகமாகவே ஆஸ்தி.

12 லக்ஷத்திற்கும் மேலாகவே வருட வருமானம்.

இக்கம்பெனிக்கு உண்டான விசேஷ லக்ஷணங்கள் பலவற்றுள் ஒரு சில :—

இக்கம்பெனியின் நிதி பூரண நம்பிக்கையுள்ள வகையிலிருக்கிறது.

இது ஜரூராகவும் பக்ஷபாத மின்றியும் பாத்யஸ்தர்களுக்குப் பணம் கொடுக்கிறது.

இதில் சிக்கனமான நிர்வாகம் நடக்கிறது.

மட்டான சந்தா, அவைகளுடன் கூடி திருப்திகரமான போனஸ் பணம்.

பாலிஸிதாரர்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் சித்தமாகவும், வெகு திறமையுடனும், தயவோடும் செய்து தருகிறது.

பூரண விவரங்களுக்குத் தலைமை ஆபீஸிற்கோ, அல்லது நாட்டின் பல பாகங்களிலும் உள்ள எங்கள் கம்பெனிப் பிரதிநிதிகளுக்கோ எழுதித் தாமதமின்றித் தெரிந்து கொள்ளலாம்.

"யுனைடெட் இந்தியா அஷ்யூரன்ஸ் பில்டிங்ஸ்"
செம்புதாஸ் தெரு, சென்னை.

M. K. ஸ்ரீனிவாசன்,
மானேஜிங் டைரெக்டர்.

தர்ம பாதை

[பகவான் புத்தரால் உபதேசிக்கப்பட்டது. இதன் மூலம் பாலி பாஷையிலுள்ளது. அதிலிருந்து புரொபஸர் மோக்ஷ மூலர் (Max Muller) ஆங்கிலத்தில் மொழி பெயர்த்ததை பாலையூர் ராஜகோபாலய்யர் தமிழாக்கி யிருக்கின்ருர்.]

1. நாம் இப்பொழுது இருக்கும் நிலைமையெல்லாம் நமது முன் நினைப்புகளின் பயனேயாகும். கெட்ட நினைப்பினுல் தீயவையும் நல்ல நினைப்பினல் நன்மையும் நிழல்போல் நன்மைத் தொடர்கின்றன.

2. விரோதத்தை பகைமையினல் வெல்லமுடியாது, அன்பினல்தான் வெல்லமுடியும்.

3. ஊக்கமுள்ளவன், மறதியின்மையாலும், நல்ல செய்கையினுலும், முன் யோசனையாலும். தன்னடக்கத்தாலும் உயர்வை யடைகிருன்.

4. புத்தியுள்ள மனிதர் மனதையும் கட்டுப்படுத்த வேண்டும். கட்டுக் கடங்காத மனமும், எண்ணமும் துன் மார்க்கத்துக்கு இட்டுச் செல்லும்.

5. வாசனை காற்றடிக்கும் பக்கமாகத்தான் பரவும். காற்றுக்கு எதிரிடையாகப் போகாது. ஆனல் நல்ல மனிதருடைய வாசனையானது காற்றையும் எதிர்த்துச் செல்லும்.

6. தேனீயானது ஒரு புஷ்பத்துக்கோ வாசனைக்கோ, வர்ணத்துக்கோ ஹானி செய்யாமல் எப்படித் தேனை மாத்திரம் பருகுகின்றதோ அப்படியே மகான்களும் உலகத்துக்குத் துன்பம் செய்யாமல் நல்லவைகளைக் கிரகிக்கின்ருர்கள்.

7. விழித்துக்கொண்டிருப்பவனுக்கு இரவு பெரியதாயிருக்கிறது. களைப்புள்ளவனுக்குப் பாதை தூரமாகக் காணப்படுகிறது. அப்படியே உண்மை யறியாத மூடர்களுக்கு வாழ்க்கை சுமையாக விருக்கிறது.

8. தனக்கு ஒன்றும் தெரியாது என்று எண்ணுபவனுக்குக் கொஞ்சமாவது புத்தியுண்டு; தனக்கு எல்லாம் தெரியும் என்றிருப்பவன்தான் சுத்த முட்டாள்.

9. தீங்கு நினைப்பவனையும், தாழ்ந்த புத்தியுள்ளவனையும் நண்பராக அடையாதே. தர்மவான்களை நண்பராகக்

கொள். அவர்களே இகழுக்கும், புகழுக்கும் அசையாதவர்கள்.

10. பேதமையை யகற்றியவனும், பந்தங்களை விட்டவனும், ஆசைகளை வேரறுத்தவனுமே உண்மையான மகான்.

11. உலகத்தை ஜயிப்பதைக் காட்டிலும் தன்னைத்தான் ஜயிப்பதே மேல்.

12. கெட்ட செய்கை வெளிப்படும் வரையில்தான் அதைச் செய்பவன் சந்தோஷமா யிருக்கிருன். வெளிப்பட்ட பிறகுதான், தன் தவறுகளை உணர்கிருன்.

13. யாரையும் கொல்லாதே. கடூர வார்த்தையும் சொல்லாதே.

14. சரீரம் எலும்பால் கட்டுப்பட்டுச் சதையாலும் ரத்தத்தாலும் மூடப்பட்டிருக்கிறது. அதில் கிழத்தனமும் சாவும் குடியிருப்பதைவிட வேறு என்ன இருக்கிறது?

15. பிறர் எப்படிச் செய்யவேண்டுமென்று நீ விரும்புகிருயோ அதை முதலில் நீ செய்.

16. உலகம் நீர்க்குமிழி போன்றது; கானல் நீருக்குச் சமானம். இதை நம்புவதில் பயனில்லை.

17. மகான்கள் எங்கும் பிறப்பதுமில்லை; காணப்படுவதுமில்லை.

18. ஆசையே துக்கம். நிராசையே பரம சுகம்.

19. ஆசையே நெருப்பு. சரீரம் துன்பத்திற்குக் காரணம். சாந்தியே சுகம். பசியே நோய். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். திருப்தியுள்ளவனே பணக்காரன். நம்பிக்கையே உறவு.

20. இன்பத்திலிருந்து துன்பமும் பயமும், பற்றுதலிலிருந்து பயமும் உண்டாகின்றன.

21. தர்மம், நீதி, புத்தி, சத்தியம், தன் கடமையைச் செய்தல் முதலிய குணங்களுள்ளவனையே உலகம் போற்றுகிறது.

22. கோபத்தைப் போக்கு; அகங்காரத்தைத் தள்ளு; பந்தத்தை ஒழி. இனித் துக்கமே இருக்காது.

23. நன்ருக உழை. புத்திசாலியாக இரு. அசுத்தங்களைப் போக்கு. பின்பு நீ சுவர்க்கத்துக்கு அருகனுவாய்.

24. வாழ்வுக்கு முடிவுண்டு, சாவு பின் தொடர்கின்றது. வாழ்க்கை யாத்திரையில் ஓய்வு என்பது கிடையாது. ஆனதால் சமயத்தை நல்வழியில் உபயோகப் படுத்து.

25. நிறையப் பேசுபவன் படித்தவனுகான். பொறுமை, துவேஷமின்மை, பயமின்மை யுடையவனே பண்டிதன்.

26. இல்லாததைச் சொல்பவனும் "இதை நான் செய்தேன்" என்று இறுமாப்பு அடைபவனும் துன்பத்தையே அடைகிருர்கள்.

27. கோவேறு கழுதை, குதிரை, யானை இவைகள் பழக்கப்பட்டால் வேலை செய்கின்றன. நம் மனதும் பழக்கப்பட்டால் நல்ல உபயோகமாயிராதா?

28. யோஜனை யற்றவனுக இராதே. உன் எண்ணங்களைக் கவனி. தீமையினின்றும் விலகு. இதுவே சன்மார்க்கம்.

29. சென்றதையும், இனிச் சேர்வதையும் கருதாதே. கண் முன் நின்றதைப் பயன் கருதாமல் செய். இதுவே விடுதலைக்கு மார்க்கம்.

30. ஜாதி, குலம், பிறப்பு, முதலியவைகளால் ஒருவன் பிராம்மணனுகான். சத்திய முள்ளவன், பற்றற்றவன், கோபத்தை விட்டவன், கடமையைச் செய்வதில் ஊக்கமுள்ளவன் பிறர் குற்றம் பொறுப்பவன் இவனே பிராம்மணன்.

கதரை

அணியுங்கள்

தென்னாப்பிரிக்கா சத்தியாக்கிரகம்

(மகாத்மா காந்தி எழுதியது)

கோவை அவிநாசிலிங்கமும், மதுரை சுப்பராமனும் மொழிபெயர்த்தது.

முதல் பாகம் (264 பக்கங்கள் கொண்டது) விலை ரூ. 1—0—0

மகாத்மா காந்தி முதன் முதல் சத்தியாக்கிரகத்தை நடத்தி வெற்றி கண்டது தென்னாப்பிரிக்காவில் தான். அதன் சரித்திரத்தை மகாத்மா தாமே எழுதியிருக்கிறார். இதில் பல உருக்கமான நிகழ்ச்சிகளும், உயர்ந்த தத்துவங்களும், தென்னாப்பிரிக்காவைப் பற்றிய பல விவரங்களும், அங்கு இந்தியர் நிலைமைகளும் விஸ்தரிக்கப் பட்டிருக்கின்றன. இந்த முதல் பாகத்தில், ஐரோப்பியரின் பலத்த எதிர்ப்புக்கிடையே மகாத்மாஜீ தென்னாப்பிரிக்காவுக்குள் பிரவேசித்து, பல ஆபத்துக்களுக்கும் ஆள்பட்டு, பெரிய தொரு சத்தியாக்கிரகப் போரை நடத்தி, சர்க்காருடன் முதல் ஒப்பந்தத்தைச் செய்து கொண்டது வரையிலுள்ள அரிய சரித்திரம் அடங்கியிருக்கிறது.

சுதந்திரச் சங்கு காரியாலயம், 8-c, பைகிராப்ட்ஸ் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

"Swathanthara Sangu"

A high class popular Tamil weekly.

Price one anna a copy.

Annual subscription :

Inland Rs. 4. **Foreign Rs. 6.**

ADVERTISEMENT TARIFF

	Per Insertion.		
Advertisement rates per Page	Rs. 40	0	0
" Half Page	Rs. 20	0	0
" Quarter Page	Rs. 10	0	0
" per column inch	Rs. 1	8	0

One page is divided into 3 columns of $2\frac{1}{4}'' \times 9''$.

Cover Pages

2nd & 3rd cover page Rs. 50.
4th cover page Rs. 75.

For contracts of 3 months, 6 months and One year a discount of 5, 10 & 15% respectively will be given over these rates.

Office : 8-c, Pycrofts Road,
TRIPLICANE, MADRAS.

"சுதந்திரச் சங்கு"

ஒரு உயர்தரத் தமிழ் வாரப் பத்திரிகை.

தனிப் பிரதி விலை அணா 1.

வருடச் சந்தா :

உள்நாடு ரூ. 4. வெளிநாடு ரூ. 6.

விளம்பர விகிதங்கள்

ஒரு பக்கத்திற்கு தடவை ஒன்றுக்கு		ரூ.	40	0	0
அரைப் பக்கத்திற்கு "	"	ரூ.	20	0	0
கால் பக்கத்திற்கு "	"	ரூ.	10	0	0
ஒரு பத்தி ஒரு அங்குலத்துக்கு "	"	ரூ.	1	8	0

ஒரு பக்கம் $2\frac{1}{4}'' \times 9''$ அளவுக்கு 3-பத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

அட்டைப் பக்கங்கள்

2-வது, 3-வது பக்கங்களுக்கு ஒரு தடவைக்கு ரூ. 50.
4-வது பக்கத்துக்கு ஒரு தடவைக்கு ரூ. 75.

3-மாதம், 6-மாதம், ஒரு வருஷம் ஒப்பந்தங்களுக்கு, இந்த விகிதங்களிலிருந்து முறையே நூற்றுக்கு 5, 10, 15 வீதம் 'டிஸ்கவுண்ட்' தள்ளிக் கொடுக்கப்படும்.

மானேஜர்,
"சுதந்திரச் சங்கு",
8-c, பைக்ராப்ட்ஸ் ரோடு,
திருவல்லிக்கேணி, சென்னை.

தமிழ்நாடு ஹரிஜன சேவக சங்கம்

திருச்சினாப்பள்ளி,

சுற்றறிக்கை நெ. 28. 9—1—34.

மகாத்மாவின் தமிழ்நாட்டு சுற்றுப் பிரயாணம் வெற்றிகரமாகவும், மகாத்மாவுக்கு யாதொரு சிரமம் இல்லாமலும் நடைபெற, ஒவ்வொரு இடத்திலும் சுற்றுப் பிரயாண ஏற்பாடு செய்பவர்கள் அடியில் கண்ட விஷயங்களைக் கண்டிப்பாக சற்றும் மாறுபாடின்றி அமுலுக்குக் கொண்டுவர வேண்டியது. இது விஷயமாக தாங்கள் செய்திருக்கும் ஏற்பாடுகளுக்கு உடனே திருச்சி ஆபீசுக்குத் தகவல் தெரிவிக்கவும். தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களையும் நிகழ்ச்சிக் குறிப்புகளில் ஏதேனும் மாற்ற வேண்டி இருந்தால் அவைகளையும் உடனுக்குடன் இவ்வாபீசுக்கு எழுதித் தெரிந்துகொள்ள வேண்டும். ஒவ்வொரு ஊரிலும் உள்ள ஏற்பாடுகளைக் கவனிக்கவும் இந்தச் சுற்றறிக்கையை அப்படியே அமுலுக்குக் கொண்டுவரவும் இவ்வாபீஸ் மானேஜர் ஸ்ரீமான் சி. து. கோபாலனைத் தங்களூருக்கு முன்கூட்டியே அனுப்பி வைக்கிறேன். நிகழ்ச்சிகள் குறிப்பதில் ஏதேனும் மாறுதல் செய்ய வேண்டி இருந்தால் அவைகளை அவரைக் கலந்துகொண்டு செய்துவிடவும், அவர் தங்கள் ஊருக்கு வந்து போன பின்பு எவ்வித மாறுதலும் செய்ய முடியாதென்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். தங்கள் நிகழ்ச்சிக் குறிப்புகளில் கண்ட எல்லா இடங்களுக்கும் அவரைக் கூட்டிக்கொண்டு போய் நேரில் காண்பித்து வேண்டுவன செய்யவும்.

1. நிகழ்ச்சிகள் குறித்த நேரத்தில் ஒரு நிமிடம்கூட மாறாமல் ஏற்பாடு செய்யவும்.

2. குறித்த இடத்தில் கூட்டங்களைக் கூட்டவேண்டும்.

3. காரிலேயே உபன்னியாசங்கள் போட்டிருக்கும் இடங்களில் தனியான பிரசங்க மேடை போடக்கூடாது. இதைக் கண்டிப்பாய் அனுசரிக்க வேண்டும்.

4. பிரசங்க மேடைகள் போட அனுமதித்திருக்கும் இடங்களில் தயாரித்து அனுப்பியிருக்கும் பிளான் மாதிரி ஏற்பாடு செய்யவேண்டும். வேறு எவ்விதமான ஏற்பாடுகளும் செய்யக்கூடாது. இது மகாத்மாவின் அபிப்பிராயப்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

5. ஜனங்களை அமரிக்கையாய் உட்காரச் செய்யவேண்டும். ஜனங்கள் மகாத்மாவின்மேல் விழுந்து அவரைத் தொடவேண்டுமென்னும் ஆவலை அறவே நிவர்த்திக்க வேண்டும்.

6. இவ்வாபீஸ் 21 நெ. சுற்றறிக்கைப்படி சகல ஏற்பாடுகளும் செய்ய வேண்டும்.

7. ஒலி பரப்பும் கருவிகள் ஏற்பாடு செய்ய வேண்டுமென நினைப்பவர்கள் இதுவரையில் தகவல் கொடுக்காதிருந்தால் இம்மாதம் 15ந்தேதிக்குள் இவ்வாபீசுக்குத் தந்தி மூலம் தகவல் கொடுக்கவேண்டும். ஒரு கூட்டத்திற்கு ஏற்பாடு செய்ய ரூ. 100-க்கு மேல் ஆகாது. தொகையை முன் கூட்டியே இவ்வாபீஸ் மானேஜர் தங்கள் ஊருக்கு வரும்போது செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவும்.

குறிப்பு:—மின்சார வசதி இல்லாத ஊர்களிலும் பேட்டரியின் உதவியைக் கொண்டு ஒலி பரப்பும் கருவிகள் உபயோகிக்க ஏற்பாடு செய்யப்படப் போகிறது. மற்றத் தகவல்களுக்கு இவ்வாபீஸ் மானேஜர் தங்கள் ஊருக்கு வரும்போது நேரிலோ அல்லது இவ்வாபீசுக்கு எழுதியோ தெரிந்து கொள்ளவும்.

தி. சே. சௌ. ராஜன்,
அக்கிராசனர்.